**இலங்கை அரச பெருந்தோட்ட கூட்டுத்தாபனம் - 2020**

---

**1. நிதிக் கூற்றுக்கள்**

**1.1 பாதமான அபிப்பிராயம்**

இலங்கை அரச பெருந்தோட்ட கூட்டுத்தாபனத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்கள் தொடர்புடைய குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் மற்றும் 1958 இன் 04 ஆம் இலக்க இலங்கை அரச பெருந்தோட்ட கூட்டுத்தாபன சட்டத்தின் 14 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் முக்கியத்துவம் காரணமாக, கூட்டுத்தாபனத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் உண்மையாகவும் நியாயமாகவும் காணப்படும் வகையில் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படவில்லை என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 பாதகமான அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் பாதகமாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது பாதகமான அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கூட்டுத்தாபனம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கூட்டுத்தாபனத்தை கலைப்பதற்கு கருதினால்

அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் அடிப்படையின் மீது கணக்கீடு செய்தல் மற்றும் கூட்டுத்தாபனம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துதல் முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கூட்டுத்தாபனத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் கூட்டுத்தாபனத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- கூட்டுத்தாபனத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கூட்டுத்தாபனத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். அத்துடன் அந்த வெளிப்படுத்தல்கள் போதியளவினதாக காணப்படாவிடின் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் மீது தொடர்ந்தியங்கும் நிலைமை முடிவடையலாம்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கூட்டுத்தாபனத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- கூட்டுத்தாபனத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கூட்டுத்தாபனம் இணங்கியிருந்ததா என்பதும்,

- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணக்கமின்மை

| | இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை நிதி அறிக்கையிடல் நியமம் 7 இன் பந்தி 8(அ) மற்றும் (ஆ) இன் பிரகாரம் பிணை வைக்கப்பட்ட சொத்துக்கள் தொடர்பாக நிதிக் கூற்றுக்களில் போதியளவு வெளிப்படுத்தல் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும், மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு வங்கி மேலதிக பற்றாகிய ரூபா 101,282,759 தொகைக்காக பிணை வைக்கப்பட்டிருந்த நிலையான வைப்புக்கள் தொடர்பாக நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தல் ஏதும் மேற்கொண்டிருக்கவில்லை. | 2020 நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கும் போது ஏற்பட்டிருந்த இந்த குறைபாடுகள் 2021 நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கும் போது சரி செய்யப்பட்டது. | பிணை என வைக்கப்பட்டிருந்த நிலையான வைப்புக்கள் தொடர்பாக நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டும். |
| (ஆ) | இலங்கை கணக்கீட்டு நியமம் 07 இன் 17(இ) ஆம் பந்தியின் பிரகாரம் நிதி செயற்பாடுகள் மூலம் உருவாக்கப்படும் காசுப் பாய்ச்சல்கள் தனியாக வெளிப்படுத்த வேண்டியிருந்த போதிலும், மீளாய்வாண்டின் போது கூட்டுத்தாபனத்தினால் பெறப்பட்டிருந்த ரூபா 100,000,000 இற்கான கடன் நிதிச் செயற்பாடுகளில் இனங்கண்டிருக்காமையினால் நிதிச் செயற்பாடுகளின் மூலம் உறுவாக்கப்பட்ட காசுப்பாய்ச்சல் அந்தப் பெறுமதியினால் குறைந்திருந்தது. | 2020 நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கும் போது ஏற்பட்டிருந்த இந்த குறைபாடுகள் 2021 நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கும் போது சரி செய்யப்பட்டது. | பெற்றுக்கொள்ளப்பட்ட கடன் நிதிச் செயற்பாடுகளின் கீழ் காசுப்பாய்ச்சல் கூற்றில் உட்படுத்தப்பட வேண்டும். |
| (இ) | இலங்கை கணக்கீட்டு நியமம் 08 இன் 42 மற்றும் 43 ஆம் பந்திகளின் பிரகாரம் முன்னைய ஆண்டுகளின் போது ஏற்பட்டிருந்த தவறுகள் இறந்த காலத்திற்கு ஏற்ப சீராக்கல் மேற்கொண்ட பின்னர் மீளாய்வாண்டிற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்த ஒப்பீட்டு ரீதியான தகவல்கள் சரி செய்யப்பட வேண்டியிருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது உரிமை மூலதன மாற்றங்கள் கூற்றில் காட்டப்பட்டிருந்த ரூபா 4,886,661 தொகை மற்றும் 2019 ஆண்டில் ரூபா 10,158,950 தொகைக்கான பிழைகள் கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நிதி | கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள குறைபாடுகள் ஏற்படாதவாறு 2022 ஆண்டிற்குரிய நிதிக் கூற்றுக்கள் தயாரிப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படும். | இலங்கை கணக்கீட்டு நியமங்களின் ஏற்பாடுகளின் பிரகாரம் ஒப்பீட்டு ரீதியான எண்ணிக்கைகள் வெளிப்படுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நிலைமைக் கூற்றில் ஒப்பீட்டு ரீதியாக சரி செய்யப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஈ) | இலங்கை கணக்கீட்டு நியமம் 13 இன் 37 ஆம் பந்தியின் பிரகாரம் 10 வருடங்களுக்கு மிகையான காலப் பகுதி முதல் நிதி நிலைமைக் கூற்றில் ரூபா 645 மில்லியன் தொகை என காணப்படும் உரித்தான காணிகள் மற்றும் கூட்டுத்தாபனத்தின் 14 தோட்டங்களுக்குரிய 11,178 ஹெக்டயர் தொகைக்கான காணிகள் நியாயமான பெறுமதிக்கு பெறுமதி மதிப்பீடு செய்து கணக்கீடு செய்திருக்கவில்லை. | கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான காணிகளில் வலகந்துவ தோட்டத்தொகுதி மாத்திரம் ரூபா 620 மில்லியனுக்கு பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன், அந்தப் பெறுமதி மற்றும் 1996 இல் ஏனைய காணிகளின் அபிவிருத்தி விடயங்களுக்காக செலவிடப்பட்டிருந்த தொகையும் உட்பட 2020 ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களில், நிதி நிலைமைக் கூற்றில் ஆதனங்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்களின் கீழ் மொத்தச் சொத்துக்களின் பெறுமதி என ரூபா 645 மில்லியன் தொகை காட்டப்பட்டிருந்தது. ஏனைய காணிகளை பெறுமதி மதிப்பீடு செய்வதற்காக விலை மதிப்பீட்டுத் திணைக்களத்துடன் உரிய அலுவல்கள் மேற்கொள்ளல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. | அனைத்துக் காணிகள் மற்றும் தோட்டங்களின் நியாயமான பெறுமதி நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டும். |
| (உ) | இலங்கை கணக்கீட்டு நியமம் 16 இன் 34 ஆம் பந்தியின் பிரகாரம் ரூபா 271,701,475 இற்கான கிரயத்தையுடைய முழுமையாக பெறுமானத் தேய்வு செய்யப்பட்டிருந்த சொத்துக்களை மீள்மதிப்பீடு செய்து நியாயமான பெறுமதி கணக்குகளுக்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பூச்சியப் பெறுமதியொன்றினை கொண்டிருந்த நிலையான சொத்துக்களை மீள்மதிப்பீடு செய்தல் 2023 ஆண்டின் போது மேற்கொள்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. | முழுமையாக பெறுமானத் தேய்வு செய்யப்பட்ட சொத்துக்களை மீள்மதிப்பீடு செய்து நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட வேண்டும். |
| (ஊ) | இலங்கை கணக்கீட்டு நியமம் 16 இன் 37 ஆம் பந்தியின் பிரகாரம் ஒரே சமமான தன்மையையுடைய மற்றும் பயன்படுத்தப்படும் சொத்துக்களை மாத்திரம் தொகுதிப்படுத்தி கணக்கீடு செய்யும்படி சுட்டிக் காட்டப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் நிதி நிலைமைக் கூற்றில் கூட்டுத்தாபனத்திற்குரிய தோட்டத் தொகுதிகளில் காணப்படும் கணினிகள், உபகரணங்கள், தளபாடங்கள் மற்றும் பொருத்துக்கள் ஆகிய நிலையான சொத்து வகைகள் | 2020 நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கும் போது ஏற்பட்டிருந்த இந்த தவறினை 2022 நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கும் போது சரி செய்யப்படும். | அனைத்து நிலையான சொத்துக்களும் நியமத்தின் பிரகாரம் வகைப்படுத்தி கணக்கீடு செய்ய வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அனைத்தும் உபகரணங்கள், தளபாடங்கள் மற்றும் பொருத்துக்கள் ஆகிய தனிப்பட்ட விடயத்தின் கீழ் நிதி நிலைமைக் கூற்றில் காட்டப்பட்டிருந்தது. | | |
| (எ) | இலங்கை கணக்கீட்டு நியமம் 16 இன் 37 ஆம் பந்தியின் பிரகாரம் விவசாயம்சார் அலுவல்கள் தொடர்பான போஷாக்கு இன விருத்திச் சொத்துக்கள் நிதி நிலைமைக் கூற்றில் ஆதனங்கள் பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்களின் கீழ் தனியான விடயம் ஒன்றென சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், இனவிருத்திச் சொத்துக்களின் கீழ் காட்டப்பட்டிருந்தது. | 2020 நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கும் போது ஏற்பட்டிருந்த இந்த தவறினை 2021 நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கும் போது சரி செய்யப்பட்டுள்ளது. | போஷாக்கு இனவிருத்தி சொத்துக்கள் நிதி நிலைமைக் கூற்றில் ஆதனங்கள் பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்களின் கீழ் தனி விடயமொன்றாக காட்டப்பட வேண்டும். |
| (ஏ) | இலங்கை கணக்கீட்டு நியமம் 19 இன் 57 ஆம் பந்தியின் பிரகாரம் நிறுவனத்தின் சேவை நலன்கள் பகிர்தல் கணிக்கும் போது காப்பீட்டு முறை பயன்படுத்தல் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும், கூட்டுத்தாபனத்தினால் தனது நலன்கள் கணிக்கும் போது காப்பீட்டு முறை பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | 2023 ஆண்டிற்குரிய நிறுவனத்தின் ஊழியர் நலன்கள் பகிர்தல் கணிக்கும் போது காப்பீட்டு முறை பயன்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. | சேவை நலன்கள் பகிர்தல் கணிக்கும் போது காப்பீட்டு முறை பயன்படுத்த வேண்டும். |
| (ஐ) | இலங்கை கணக்கீட்டு நியமம் 40 இன் 75(ஏ) மற்றும் 78(அ) ஆம் பந்திகளின் பிரகாரம் ரூபா 1,611,520,641 இற்கான முதலீட்டு ஆதனங்கள் மற்றும் 1982 பெப்ரவரி 27 திகதிய 181/12 இலக்கம் கொண்ட அரச வர்த்தமானியின் மூலம் கூட்டுத்தாபனத்திற்கு வழங்கியிருந்த ஆதனங்கள் தொடர்பாக தேவையான வெளிப்படுத்தல்கள் மேற்கொண்டிருக்கவில்லை. | கூட்டுத்தாபனத்தினால் பிரதேச பெருந்தோட்ட கம்பனிகளுக்கு குத்தகைக்கு கொடுத்திருந்த ஆதனங்களின் பெறுமதி முதலீட்டு ஆதனங்கள் என நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்ததுடன், அந்த ஆதனங்கள் தொடர்பான விபரங்கள் உடன்பாட்டு பொறுப்புக்கள் தொடர்பாக 2022 ஆண்டிற்குரிய நிதிக் கூற்றுக்களின் மூலம் வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | முதலீட்டு ஆதனங்களின் பெறுமதி கணிக்கப்பட்டுள்ள முறை நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்த வேண்டும். |
| (ஒ) | இலங்கை கணக்கீட்டு நியமம் 41 இன் 4 ஆம் பந்தியின் பிரகாரம் காட்டுப் பயிர்கள் மற்றும் நுகர்வு இன விருத்திச் சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட வேண்டியிருந்த போதிலும், ரூபா 35,642,201 கிரயத்தையுடைய காட்டுப் பயிர்கள் | 2020 நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கும் போது ஏற்பட்டிருந்த இந்த வழுவினை 2021 நிதி நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது சரி செய்யப்பட்டுள்ளது. | காட்டுப் பயிர்கள் நுகர்வு இன விருத்திச் சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | போஷாக்கு இன விருத்திச் சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | | |
| (ஓ) | இலங்கை கணக்கீட்டு நியமம் 41 இன் 12 ஆம் பந்தியின் பிரகாரம் நுகர்வு இன விருத்திச் சொத்துக்கள் நியாயமான பெறுமதியில் அளவீடு செய்யப்பட வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் கூட்டுத்தாபனத்தின் 11 தோட்டங்களில் 726.73 ஹெக்டயர் முழுவதும் பரவியிருந்த காட்டுப் பயிர்கள் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு பெறுமதி மதிப்பீடொன்று மேற்கொள்ளாமல் அல்லது நியாயமான பெறுமதியொன்றிற்கு மதிப்பீடு செய்யாமல் நிதி நிலைமைக் கூற்றில் ரூபா 3,314,581,133 தொகை என காட்டப்பட்டிருந்ததுடன், அதற்காக பிழையான முறையில் 4 சதவீதம் கிரமமாக குறையும் பெறுமதியில் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. மேலும், மீளாய்வாண்டின் போது இந்த பயிர்ச் செய்கை முடிவடைந்தவை என கணித்து ரூபா 1,182,710 தொகை என கிரமமாக குறையும் பெறுமதி வருமானக் கூற்றில் செலவுகளின் கீழ் காட்டப்பட்டிருந்தமையால் அந்தப் பெறுமதியினால் கூட்டுத்தாபனத்தின் நட்டமும் மிகை கணிப்பீடு செய்யப்பட்டிருந்தது. | கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான நுகர்வு இன விருத்திச் சொத்துக்களை பெறுமதி மதிப்பீடு செய்தல் 2023 ஆண்டில் ஆரம்பிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது என அறிவிக்கின்றேன். காட்டு பயிர்கள் பிழையாக கணக்கீடு செய்யப்பட்ட பெறுமானத் தேய்வுப் பெறுமதி 2021 ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கும் போது சரி செய்யப்பட்டுள்ளது. | காட்டு பயிர்களின் நியாயமான பெறுமதி நிதிக் கூற்றுக்கள் மூலம் வெளிப்படுத்தப்பட வேண்டும். |
| (ஔ) | இலங்கை கணக்கீட்டு நியமம் 41 இன் 43, 44 மற்றும் 45 ஆம் பந்திகளின் பிரகாரம் இன விருத்திச் சொத்துக்கள் முதிர்வடைந்த மற்றும் முதிர்வடையாதவை என வெவ்வேறாக சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், மீளாய்வாண்டின் நிதி நிலைமைக் கூற்றில் நடைமுறை அல்லாத சொத்துக்களின் கீழ் வெளிப்படுத்தப்பட்டிருந்த ரூபா 193,172,503 இற்கான இன விருத்திச் சொத்துக்கள் அவ்வாறு வகைப்படுத்தி சமர்ப்பித்திருக்கவில்லை. | இந்தத் தவறு 2022 ஆண்டு நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கும் போது சரி செய்யப்படும். | இன விருத்திச் சொத்துக்கள் முதிர்வடைந்த மற்றும் முதிர்வடையாத பயிர்கள் என வகைப்படுத்தப்பட்டு நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டுக் கொள்கைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| நிதிக் கூற்றுக்களில் இலக்கம் 3.1.4.2 கொண்ட குறிப்பில் காட்டப்பட்டுள்ள கணக்கீட்டுக் கொள்கைகளின் படி நுகர்வு இன விருத்தி சொத்துக்கள் நியாயமான பெறுமதியில் வெளிப்படுத்தப்பட்டுள்ளதென குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், ரூபா 3,314,581,133 இற்கான நுகர்வு இன விருத்திச் சொத்துக்கள் நியாயமான பெறுமதியில் பெறுமதி மதிப்பீடு செய்யப்படாமல் 2012 ஆண்டில் காணப்பட்ட பெறுமதியில் மீளாய்வாண்டின் நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. | இந்தத் தவறு 2022 நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கும் போது சரி செய்யப்படும். | நிதிக் கூற்றுக்களில் கணக்குக் குறிப்பு 3.1.4.2 கொண்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் படி இன விருத்திச் நுகர்வுச் சொத்துக்கள் நியாயமான பெறுமதியில் பெறுமதி மதிப்பீடு செய்து கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

### 1.5.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) கூட்டுத்தாபனத்தின் மீளாய்வாண்டிற்காக செலுத்த வேண்டிய தோட்டப் பதவியணி சேமலாப நிதியம் (ESPS) இற்கு ரூபா 187,457 தொகை, ஊழியர் சேமலாப நிதியம் (EPF) ரூபா 175,483 தொகை, ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கு (ETF) ரூபா 194,753 தொகை மற்றும் இலங்கை பெருந்தோட்ட பயிரிடுவோர் சேமலாப நிதியத்திற்கு (The Ceylon Planters Provident Society – CPPS) செலுத்தப்பட்ட பங்களிப்புத் தொகை ரூபா 319,722 தொகை இரு தடவைகள் பதிவு செய்யப்பட்டமையால் குறிப்பிட்ட செலுத்த வேண்டிய பெறுமதி அத் தொகையினால் மிகை கணிப்பு மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், குறிப்பிட்ட திரண்ட செலவினமும் ரூபா 877,414 தொகையினால் மிகை கணிப்பு செய்யப்பட்டிருந்தது. | கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள ரூபா 877,414 இற்கான செலவு மிகை கணிப்பு 2021 ஆண்டிற்குரிய நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கும் போது சரி செய்யப்பட்டது. | நிதிக் கூற்றுக்களில் குறிப்பிட்ட சரி செய்தல்கள் மேற்கொள்ள வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | ஹுன்னஸ்போல் ஹோட்டலுக்காக கூட்டுத்தாபனத்தினால் குத்தகை அடிப்படையில் வழங்கியிருந்த பாதைக்காக கிடைத்திருந்த வருமானம் பண அடிப்படையில் கணக்கீடு செய்யப்பட்டிருந்தமையால் ரூபா 6,007,640 இற்கான பெறுமதியினால் மீளாய்வாண்டிற்கான ஏனைய வருமானங்கள் மிகையாக காட்டப்பட்டிருந்தது. | கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள குறைபாடுகள் ஏற்படாதவாறு 2022 ஆண்டிற்குரிய நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்படும். | அட்டுரு அடிப்படையில் வருமானம் கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (இ) | கூட்டுத்தாபனத்தினால் இலங்கை வங்கியின் ஹயிட்பாக் கிளையில் பேணப்பட்டு வரும் இலக்கம் 2327550 கொண்ட நடைமுறைக் கணக்கின் மேலதிகப்பற்று மீதி ரூபா 4,123,000 தொகையினால் குறைவாக நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தமையால், நடைமுறைப் பொறுப்புக்கள் அதே தொகையினால் குறை கணிப்பீடு செய்யப்பட்டிருந்தது. | கூட்டுத்தாபனத்திற்குரிய இலங்கை வங்கியின் 2327550 இலக்க நடைமுறைக் கணக்கின் கீழ் 2012 ஆண்டிற்கு முன்னர் காணப்பட்ட வங்கி மேலதிக பற்றொன்றிற்காக வங்கியினால் அறவீடு செய்யப்பட்ட வட்டியில் 50% பதிவழிப்பதற்கு வங்கியினால் இணங்கியிருந்தமையால், அதன்படி அதற்குரிய ரூபா 4,123,000 இற்கான தொகை ஏடுகளில் இருந்து அகற்றப்பட்டிருந்தது. தற்போது இலங்கை வங்கியினால் 2022 மார்ச் 03 திகதி கடிதமொன்று வழங்கப்பட்டிருந்ததுடன், அதன்படி அந்தச் சிக்கல் தீர்க்கப்பட்டிருந்தது. | எழுத்துமூல உறுதிப்படுத்தல் பெற்றுக்கொள்ளும் வரை பொறுப்புக்கள் கணக்குகளில் இருந்து பதிவழிக்கக் கூடாது. |
| (ஈ) | கூட்டுத்தாபனம் ரூபா 1,609,054 இற்கான நுளம்புக்கம்பி இருப்பொன்று பௌதீக ரீதியாக மெய்மையாய்தல் மேற்கொள்ளாமல் 2017 ஆண்டின் ஏட்டுப் பெறுமதியை அடிப்படையாகக் கொண்டு மீளாய்வாண்டின் நிதிக் கூற்றுக்களுக்கு உட்படுத்தப்பட்டிருந்தது. | ரூபா 1,609,054 தொகைக்கான நுளம்புக்கம்பி இருப்பு 2021 ஆண்டின் போது டென்டர் அழைத்தல் மூலம் விற்பனை செய்யப்பட்டதுடன், அதற்குரிய கணக்கு சீராக்கல்கள் 2021 ஆண்டு மேற்கொள்ளப்பட்டது. | இருப்புக்களை கணக்கீடு செய்வதற்கு முன்னர் பௌதீக ரீதியாக மெய்மையாய்தல் வேண்டும். |
| (உ) | 05 தோட்டத் தொகுதிகளுக்குரிய பௌதீக ரீதியாக காணப்படாத நாட்டுமேடைகள் மீளாய்வாண்டு நிதிக் கூற்றுக்களில் இனங் காணப்பட்டிருந்தமையால் ரூபா 3,594,787 தொகையினால் கூட்டுத்தாபனத்தின் சொத்துக்கள் மிகையாக காட்டப்பட்டிருந்ததுடன், நட்டமும் அதே தொகையினால் குறை கணிப்பீடு செய்யப்பட்டிருந்தது. | வெற்றியளிக்காத தேயிலை நாட்டுமேடை தொடர்பாக பரிசோதனை மேற்கொள்ளவதற்காக 2023 ஆண்டில் குழுவொன்று நியமனம் செய்வதற்காக எதிர்பார்க்கப்படுவதுடன், அந்த குழுவின் பரிந்துரையின் மீது தொடர் நடவடிக்கை மேற்கொள்வதற்காக எதிர்பார்க்கப்படுகின்றது. | பௌதீக ரீதியாக காணப்படாத கன்றுகள் ஏடுகளிலிருந்து அகற்றப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஊ) | மீளாய்வாண்டு தொடர்பாக கூட்டுத்தாபனத்தின் வர்த்தக செலுத்த வேண்டியவைகளின் வித்தியாசங்கள் ரூபா 45,442,707 தொகை எனினும், அதனை காசுப்பாய்ச்சல் கூற்றில் ரூபா 172,413,700 தொகையென கணித்திருந்தமையால் ரூபா 126,970,933 தொகையினால் செயற்பாடுகள் மூலம் உருவாக்கப்பட்ட தேறிய காசுப்பாய்ச்சல் மூலம் அதிகரித்திருந்தது. | கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள முறையில் குறைபாடுகள் ஏற்படாதவாறு 2021 ஆண்டிற்குரிய நிதிக்கூற்று தயாரிக்கப்பட்டுள்ளது. | காசுப்பாய்ச்சல் கூற்றிற்கு தேவையான சீராக்கல்கள் மேற்கொள்ளல் வேண்டும். |
| (எ) | மீளாய்வாண்டின் காசு மூலம் செலுத்தப்பட்டிருந்த ஊழியர் பணிக்கொடை கொடுப்பனவு வழங்கப்பட்ட அட்டவணையின் படி ரூபா 10,159,690 தொகை காணப்பட்ட போதிலும், காசுப்பாய்ச்சல் கூற்றில் செயற்பாட்டுத் தொழிற்பாடுகளின் கீழ் இனங் காணப்பட்ட தொகை ரூபா 7,145,102 தொகையாக காணப்பட்டமையால் செயற்பாடுகள் மூலம் உருவாக்கப்பட்ட காசுப்பாய்ச்சல் ரூபா 3,014,588 தொகை மிகையாக காட்டப்பட்டிருந்தது. | கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள முறையில் குறைபாடுகள் ஏற்படாதவாறு 2021 ஆண்டிற்குரிய நிதிக்கூற்று தயாரிக்கப்பட்டுள்ளது. | செலுத்தப்பட்ட பணிக்கொடை தொகை காசுப்பாய்ச்சல் கூற்றில் காட்ட வேண்டும். |

### 1.5.4 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் மற்றும் அறிக்கைகள்

| | விடயம் | நிதிக் கூற்றுக்களின் படி பெறுமதி<br>ரூபா | நேரொத்த அறிக்கைகளின் படி பெறுமதி<br>ரூபா | வித்தியாசம்<br>ரூபா | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|---|
| (அ) | மக்கள் பெருந்தோட்ட அபிவிருத்தி சபைக்கு செலுத்த வேண்டிய கடன் | 97,709,342 | 119,318,495 | 21,609,153 | 2023 ஆண்டில் இந்த மீதிகளிடையே காணப்படும் வித்தியாசங்கள் தொடர்பாக மக்கள் தோட்ட அபிவிருத்தி சபையுடன் கலந்துரையாடி இந்த சிக்கலை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிக் கூற்றுக்கள் மற்றும் பேரேட்டுக் கணக்கீடுகளிடையே காணப்படும் வித்தியாசங்களை இனங்கண்டு தீர்க்க வேண்டும். |
| (ஆ) | தலைமை அலுவலகத்தின் மற்றும் தோட்டத் தொகுதிகளின் நடைமுறைக் | - | 75,579,590 | 75,579,590 | தலைமை அலுவலகம் மற்றும் தோட்டத் தொகுதிகளிடையே நடைமுறைக் கணக்கில் காணப்படும் | நடைமுறைக் கணக்குகளில் காணப்படும் வித்தியாசங்களை இனங்கண்டு தீர்க்கப்பட |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | கணக்குகள் | | | | வித்தியாசங்களை பரிசோதனை செய்து தேவையான கணக்கு சீராக்கல்கள் 2022 ஆண்டில் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | வேண்டும். |
| (இ) | ஆதனங்கள் பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் | 501,455,648 | 332,581,141 | 168,874,507 | நிலையான சொத்துக்கள் பதிவேடொன்று நிறுவனத்தினால் பேணப்பட்டிருக்கவில்லை. பேரேட்டுக் கணக்குகள் மற்றும் நிலையான சொத்துக்கள் தொடர்பாக விபரங்கள் காட்டப்பட்டுள்ள பதிவேடுகளிடையே காணப்படும் ரூபா 168,874,507 இற்கான வித்தியாசம் தொடர்பாக தற்போது பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு வருவதுடன், நிலையான சொத்துக்கள் தொடர்பாக பதிவேடுகளுக்குரிய சீராக்கல்கள் 2022 ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கும் போது மேற்கொள்ளப்படும். | பேரேட்டுக் கணக்குகள் மற்றும் பதிவேடுகள் சரியாக இணக்கம் செய்து நிதிக் கூற்றுக்களில் சீராக்கல்கள் மேற்கொள்ள வேண்டும். |
| (ஈ) | நுகர்வு இன விருத்தி சொத்துக்கள் | 3,314,581,133 | 3,312,160,200 | 2,420,933 | நிலையான சொத்துக்கள் பதிவேடொன்று நிறுவனத்தினால் பேணப்பட்டிருக்கவில்லை. பேரேட்டுக் கணக்குகள் மற்றும் நிலையான சொத்துக்கள் தொடர்பாக விபரங்கள் காட்டப்பட்டுள்ள பதிவேடுகளிடையே காணப்படும் வித்தியாசம் தொடர்பாக தற்போது பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு வருவதுடன், நிலையான சொத்துக்கள் தொடர்பாக பதிவேடுகளுக்குரிய சீராக்கல்கள் 2022 | பேரேட்டுக் கணக்குகள் மற்றும் பதிவேடுகள் சரியாக இணக்கம் செய்து நிதிக் கூற்றுக்களில் சீராக்கல்கள் மேற்கொள்ள வேண்டும். |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கும் போது மேற்கொள்ளப்படும். | |
| (உ) | போஷாக்கு இன விருத்தி சொத்துக்கள் | 193,172,503 | 181,128,729 | 12,043,774 | இந்த வித்தியாசங்கள் தற்போது பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு வருவதுடன், அதற்குரிய சரி செய்தல்கள் 2022 ஆண்டிற்குரிய நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கும் போது மேற்கொள்ளப்படும். | இந்த வித்தியாசங்களை இனங்கண்டு தேவையான இணக்கங்கள் மேற்கொண்டு நிதிக் கூற்றுக்களை சரி செய்ய வேண்டும். |
| (ஊ) | போஷாக்கு இன விருத்திச் சொத்துக்கள் கூட்டுதல் | 27,979,763 | 26,454,609 | 1,525,154 | இந்த வித்தியாசங்கள் தற்போது பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு வருவதுடன், அதற்குரிய சரி செய்தல்கள் 2022 ஆண்டிற்குரிய நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கும் போது மேற்கொள்ளப்படும். | இந்த வித்தியாசங்களை இனங்கண்டு தேவையான இணக்கங்கள் மேற்கொண்டு நிதிக் கூற்றுக்களை சரி செய்ய வேண்டும். |

### 1.5.5 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| | விடயம் | தொகை ரூபா | சமர்ப்பிக்கப்படாத கணக்காய்வுச் சான்றுகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| (அ) | செயற்படாத மீதி | 1,933,043 | கொடுப்பனவு உறுதிச்சீட்டு, உரிய உடன்படிக்கை | இந்த மீதி 2012 ஆண்டிற்கு முன்னர் இருந்து காணப்படும் மீதியொன்றாக இருப்பதுடன், இது தொடர்பாக மீண்டும் பரிசோதனை மேற்கொண்டு தேவையான அங்கீகாரத்துடன் உரிய கணக்குகளில் சீராக்கல்கள் 2022 நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கும் போது மேற்கொள்ளப்படும். | கணக்காய்விற்கு தேவையான தகவல்கள் வழங்க வேண்டியதுடன், மீதிகள் தொடர்பான உரிய சீராக்கல்கள் மேற்கொண்டு நிதிக்கூற்றுக்களை சரி செய்ய வேண்டும். |
| (ஆ) | கடன் கொடுத்தோர் மீதிகள் | 174,415,850 | மீதிகளை உறுதிப்படுத்தல் மற்றும் பிற்காலங்களில் மீதிகளை தீர்த்தல் | மீதிகளை உறுதிப்படுத்துவது தொடர்பான கடிதங்கள் நேரடியாக ஜனவசம கட்டிடத்தில் | மீதிகளை உறுதிப்படுத்தல் மற்றும் பிற்காலத்தில் மீதிகளை தீர்த்தல் அறிக்கை கணக்காய்விற்கு |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | அறிக்கை | அமைந்துள்ள கணக்காய்வு அலுவலகத்திற்கு அனுப்பும்படி குறிப்பிட்ட நிறுவனங்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (இ) | கடன்பட்டோர் மீதிகள் | 101,184,952 | கடன்பட்டோர் பெயர் பதிவேடு, விற்பனவு இன்வொயிஸ், உரிய விற்பனவு உடன்படிக்கைகள் | மீதிகளை உறுதிப்படுத்துவது தொடர்பான கடிதங்கள் நேரடியாக ஜனவசம கட்டிடத்தில் அமைந்துள்ள கணக்காய்வு அலுவலகத்திற்கு அனுப்பும்படி குறிப்பிட்ட நிறுவனங்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | கணக்காய்விற்கு தேவையான தகவல் பதிவேடுகள் மற்றும் ஏனைய சான்றுகள் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | மர விற்பனை மீதான கடன் | 2,801,000 | பெறுமதி மதிப்பீட்டு அறிக்கைகள், இன்வொயிஸ்கள், வழங்குனர் தகவல்கள் மற்றும் விற்பனை உடன்படிக்கைகள் | மர விற்பனை மீதான கடன் பெறுமதியாகிய ரூபா 2,801,000 இற்கான தொகை 2016 ஆண்டிற்கு முன்னர் இருந்து காணப்படும் மீதியொன்றாக காணப்படுவதுடன், இந்த மீதியின் தன்மையை பரிசோதனை செய்து பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்துடன் இந்த தொகையை ஏடுகளில் இருந்து பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | இந்த மீதிகளை உறுதிப்படுத்துவதற்காக ஆவணச் சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்க வேண்டும். |
| (உ) | திருப்பிச் செலுத்த வேண்டிய டென்டர் வைப்புக்கள் | 6,379,570 | உரிய டென்டர் கோவைகள் | ரூபா 6,379,570 இற்கான டென்டர் வைப்புத் தொகை 2006 ஆண்டிற்கு முன்னர் இருந்து முன்கொண்டு வரப்பட்டிருந்த மீதியொன்றாக காணப்படுகின்றது. இது தொடர்பாக பரிசோதனை மேற்கொண்டு பணிப்பாளர் சபை அங்கீகாரத்துடன் 2022 ஆண்டின் இந்தத் தொகையை ஏடுகளில் இருந்து பதிவழிப்பதற்கு | இந்த மீதிகளை உறுதிப்படுத்துவதற்காக ஆவணச் சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்க வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | எதிர்பார்க்கப்படுகின்றது. | |
| (ஊ) | பணிக்கொடை ஒதுக்கம் | 67,350,179 | ஒதுக்கங்களுக்குரிய அட்டவணைகள் | இது தொடர்பாக பரிசோதனை மேற்கொண்டு உரிய கணக்கு சீராக்கல்கள் 2022 ஆண்டில் மேற்கொள்ளப்படும். | இந்த மீதிகளை உறுதிப்படுத்துவதற்காக ஆவணச் சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்க வேண்டும். |
| (எ) | வன முகாமைத்துவ செலவு மற்றும் உரித்தாக்கப்பட்ட சொத்துக்கள் | 8,350,599 | கொடுப்பனவு உறுதிச் சீட்டுக்கள் | நிதி நிலைமைக் கூற்றில் ஆதனங்கள் பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்களின் கீழ் காட்டப்பட்டுள்ள வன முகாமைத்துவ திட்டம் தயாரிப்பதற்காக 2009 ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட செலவாகிய ரூபா 1,645,340 தொகையினை கணக்கீடு செய்யும் போது ஏற்பட்டிருந்த தவறு 2022 ஆண்டின் போது சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றதென அறிவிக்கின்றேன். அதேபோல், ரூபா 6,705,259 தொகைக்கான பெறுமதி 2010 ஆண்டிற்கு முன்னர் இருந்து முன்கொண்டு வரப்பட்டுள்ள மீதியொன்றாகும். இந்த மீதி ஏற்பட்டிருந்த முறை மற்றும் அமைப்பு முறை பரிசோதனை மேற்கொண்டு தேவையான கணக்கு சீராக்கல்கள் 2022 ஆண்டின் போது மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. | இந்த செலவுகள் மற்றும் மீதிகளை உறுதிப்படுத்துவதற்கு தேவையான கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியதுடன், உரிய செலவுகளை சரி செய்வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஏ) | ஆதனங்கள் பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் | 985,661,726 | காணி உறுதிகள்/ அனுமதிப்பத்திரங்கள், வீதவரி செலுத்திய அறிக்கை, வீதவரி செலுத்தும் அறிக்கை மற்றும் வாகன பதிவுச் சான்றிதழ் | கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான காணிகள், கட்டிடங்கள் மற்றும் வாகனங்கள் தொடர்பாக நிறுவனத்தில் தற்போது காணப்படும் ஆவணங்கள் 2021 ஆண்டிற்குரிய நிதிக் | ஆதனங்கள், பொறுத்தொகுதிகள் மற்றும் உபகரணங்களை உறுதிப்படுத்துவதற்குரிய ஆவணங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | கூற்றுக்களின் கணக்காய்விற்கு வருகை தரக்கூடிய கணக்காய்வு உத்தியோகத்தர்களுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | வேண்டும். |
| (ஐ) | பிற்போடப்பட்ட சொத்துக்கள் | 781,064 | கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் | இந்த பாதை பராமரிப்புச் செலவுகள் 2012 ஆண்டில் Ernst & Young கணக்காய்வு நிறுவனத்தின் அறிவுரையின் மீது 10 வருடங்களில் பதிவழிப்பதற்காக தீர்மானிக்கப்பட்டது. அவ்வாறாயினும் 2012 ஆண்டின் பின்னர் பல வருடங்கள் அந்த பெறுமானத் தேய்வை பதிவளித்தல் மேற்கொள்ளப்படாமையால் 2021.12.31 திகதி அளவில் ரூபா 438,730 தொகை மீதயொன்று காணப்பட்டது. | கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்க வேண்டும். |
| (ஒ) | நுகர்வு இருப்பு | 4,870,669 | இருப்பு மென்மையாதல் அறிக்கை | 2020.12.31 திகதியில் உள்ளவாறு பொடகஹ, கோமர, ஹெயாபார்க், ஹுன்னஸ்கிரிய, வைதலாவ மற்றும் வலகந்துவ ஆகிய தோட்டங்களில் உரம், இரசாயன பண்டங்கள் மற்றும் பெருந்தோட்ட அலுவல்களுக்கு தேவையான நுகர்வுப் பண்டங்கள் பௌதீக ரீதியாக சான்றுபடுத்துவதற்குரிய சான்றுபடுத்தல் அறிக்கைகளின் பிரதிகள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. | இருப்பு சான்றுபடுத்தல் அறிக்கைகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாமையால் தாமதம் இன்றி இந்த அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (ஓ) | வர்த்தக பெற வேண்டியவைகள் | 25,878,517 | கடன்பட்டோர் பெயர் பட்டியல், விற்பனவு | அறவிடப்படாத கடன்பட்டோர் | மீதிகளை உறுதிப்படுத்துவதற்காக |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | இன்வொயிஸ் பத்திரங்கள், உரிய விற்பனவு உடன்படிக்கைகள் | தொடர்பாக விபரங்களை பரிசோதனை செய்தவற்காக தற்போது உத்தியோகத்தர் குழுவொன்று நியமனம் செய்யப்பட்டுள்ளதுடன், அந்த விபரங்கள் கிடைத்த பின்னர் அந்தத் தொகையை அறவீடு செய்தல் அல்லது ஏடுகளில் இருந்து பதிவழித்தல் தொடர்பாக பரிந்துரைகள் சமர்ப்பிக்கும் படி மேலும் ஒரு குழுவொன்று நியமனம் செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. அந்தக் குழுவின் பரிந்துரைக்காக பணிப்பாளர் சபையின் தீர்மானத்தின் படி தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும். | ஆவணச் சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்க வேண்டும். |
| (ஔ) | விஷேட சேதப்படுத்தலுக்கான ஒதுக்கம் மற்றும் ஐயக்கடன் ஒதுக்கம் | 49,128,419 | ஒதுக்கங்களுக்குரிய கடன்பட்டோர் பதிவேடு பணிப்பாளர் சபை அங்கீகாரம் | இந்த மீதிகள் 2012 ஆண்டிற்கு முன்னர் இருந்து முன்கொண்டு வரப்பட்டவையாக காணப்படுவதனால் அந்த பெறுமதி அமைந்துள்ள முறை தொடர்பாக பரிசோதனை மேற்கொண்டு 2022 நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கும் போது உரிய வெளிப்படுத்தல்கள் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | இந்த மீதிகளின் உண்மைத் தன்மையினை உறுதிப்படுத்திக்கொள்வதற்காக தேவையான ஆவணச்சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

**1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

**1.6.1 பெறவேண்டிய கணக்குகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதி நிலைமை கூற்றில் நடைமுறை சொத்துக்களின் கீழ் காட்டப்பட்டுள்ள ரூபா 169,523,942 இற்கான கடன்பட்டோர் மீதிகளில், 2 வருடங்களுக்கும் 4 வருடங்களுக்கும் இடைப்பட்ட மீதி ரூபா 1,984,314 தொகை 0.7 சதவீதமாகக் காணப்பட்டதுடன் 5 வருடங்களை மிகைத்துள்ள மீதி ரூபா 87,063,235 தொகை எனப்படும் 50 சதவீதம் என காணப்பட்டது. இந்த கடன்பட்டோர் மீதிகளை அறவீடு செய்வதற்காக கூட்டுத்தாபனத்தினால் மீளாய்வாண்டின் போது ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுக்கப்படாமையால் அறவீடு செய்வதில் நிச்சயமற்ற தன்மை ஒன்று அவதானிக்கப்பட்டதுடன் அந்த மீதிகளுக்காக ஐயக் கடன் ஒதுக்கம் மேற்கொள்வதற்காக கூட்டுத்தாபனத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அறவிடப்படாத கடன்பட்டோர் தொடர்பாக விபரங்களை பரிசோதனை செய்தவற்காக தற்போது உத்தியோகத்தர் குழுவொன்று நியமனம் செய்யப்பட்டுள்ளதுடன், அந்த விபரங்கள் கிடைத்த பின்னர் அந்தத் தொகையை அறவீடு செய்தல் அல்லது ஏடுகளில் இருந்து பதிவழித்தல் தொடர்பாக பரிந்துரைகள் சமர்ப்பிக்கும் படி மேலும் ஒரு குழுவொன்று நியமனம் செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. அந்தக் குழு பரிந்துரைக்காக பணிப்பாளர் சபையின் தீர்மானத்தின் படி தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும். | இந்த கடன்பட்டோர் மீதியை அறவீடு செய்வதற்காக ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2014 ஒக்தோபர் 15 திகதி கூட்டுத்தாபனத்தினால் உடன்படிக்கை ஒன்றுக்கு அனுகாமல் ரூபா 6 மில்லியனுக்கான கடன்தொகை ஒன்று எல்கடுவ பெருந்தோட்டக் கம்பனிக்கு வழங்கப்பட்டிருந்ததுடன், 2015 ஆண்டு முதல் கம்பனியினால் இந்த கடன்தொகையை செலுத்துவதை புறக்கணித்து இருந்தமையால் அறவீடு செய்யப்படாமல் காணப்பட்ட கடன் மீதியாகிய ரூபா 1,916,092 தொகைக்காக ஐயக் கடன் ஒதுக்குவதற்காக கூட்டுத்தாபனம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | எல்கடுவ பெருந்தோட்டக் கம்பனியில் இருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 1,916,092 தொகை தொடர்பாக பெருந்தோட்டத் தொழில் அமைச்சுடன் கலந்துரையாடி அதனை ஏடுகளிலிருந்து பதிவழிப்பதற்கு அல்லது அறவீடு செய்வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படும். | இந்த கடன்மீதிகளை அறவீடு செய்வதற்காக உடன்படிக்கை மேற்கொள்ளல், கணக்குகளில் போதியளவு ஒதுக்கங்கள் மேற்கொள்ளல் மற்றும் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் மேற்கொள்ள வேண்டும். |

**1.6.2 செலுத்த வேண்டிய கணக்குகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கூட்டுத்தாபனத்தின் கடன்கொடுத்தோர் காலப் பகுப்பாய்வின் படி 1 முதல் 4 வருடங்கள் வரை தீர்க்கப்படாத மீதி ரூபா 363,323,605 தொகையும், 5 வருடங்களை மிகைத்துள்ள தீர்க்கப்படாத மீதி ரூபா | பல வருடங்களாக கூட்டுத்தாபனம் முகங்கொடுத்த நிதி நெருக்கடி காரணமாக கடன்கொடுத்தோர் தீர்த்தல் உரிய முறையில் மேற்கொள்வதற்கு முடியாமல் | இந்த நீண்டகால கடன்மீதியை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 700,185,731 தொகையும் காணப்பட்டமையால் அந்த கடன்மீதி தீர்க்கப்படாமையால் கூட்டுத்தாபனத்தின் பொறுப்புக்கள் மிகை மதிப்பிடப்படும் ஆபத்து ஒன்று காணப்பட்டது. | இருந்தது. காலங்கடந்த கடன்கொடுத்தோரை தீர்த்தல் அல்லது அந்த மீதிகளை மீண்டும் வருமானத்திற்கு எடுத்தல் தொடர்பாக 2022 ஆண்டு முடிவடைய முன்னர் தீர்மானம் ஒன்று எடுக்கப்படவுள்ளது. | |
| (ஆ) | தோட்ட பதவியணி சேமலாப நிதியம் (ESPS) இற்கு உரிய முறையில் பங்களிப்புத் தொகை செலுத்தப்படாமையால் மீளாய்வுத் திகதியில் உள்ளவாறு காணப்பட்ட பொறுப்புக்கள் ரூபா 16,625,046 தொகை தீர்க்கப்படாமையால் இந்த பொறுப்புக்களுக்காக செலுத்துவதற்கு நேரிடும் மிகை விதிப்புக்கான ஒதுக்கம் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | கூட்டுத்தாபனம் பல வருட காலம் முதல் முகங்கொடுத்து இருந்த நிதி நிலைமை காரணமாக தோட்ட பதவியணி சேமலாப நிதிய சங்கத்திற்கு (ESPS) பங்களிப்புத் தொகை உரிய முறையில் அனுப்புவதற்கு முடியாமல் இருந்தது. | தோட்ட பதவியணி சேமலாப நிதிய நிலுவை மீதியை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்ததுடன் எதிர்பார்த்த மிகை விதிப்புக்காக ஒதுக்கம் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (இ) | 8 வருடங்களுக்கு முன்னர் இருந்து காணப்படும் ரூபா 786,379 தொகைக்கான மரங்களுக்காக பெற்ற முற்பண பெறுமதியினை தீர்ப்பதற்கு அல்லது பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்காமையால் கூட்டுத்தாபனத்தின் பொறுப்பு மிகை மதிப்பீடு செய்யப்படும் ஆபத்து நிலை ஒன்று காணப்பட்டது. | மரங்களை விற்பனை செய்வதற்காக டென்டர்களின் போது பெற்றுக் கொள்ளப்பட்ட தொகை (திருப்பிச் செலுத்த வேண்டிய வைப்புத் தொகை) மீண்டும் செலுத்துதல் நேரிட்டிருக்காமை அந்த வாடிக்கையாளர்கள் மற்றும் கூட்டுத்தாபனத்திற்கு இடையே ஏற்பட்டிருந்த சில சிக்கல் நிலைமையின் காரணமாகவே இது தொடர்பாக விடயங்களை பரிசோதனை செய்து 2023 ஆண்டில் அந்த தொகை கூட்டுத்தாபனத்தின் வருமானம் ஒன்றென கணக்கீடு செய்வதற்கு அல்லது அந்த தொகையினை உரிய தரப்பினருக்கு விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | டேன்டர் வைப்பு மீதிகள் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| | சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2015 மே 25 திகதிய 1/2015 இலக்கங் கொண்ட அரச தொழில் முயற்சிகள் சுற்றறிக்கை | MM தொகுதிக்குரிய உத்தியோகத்தர்களுக்கு மோட்டார் வாகன கொடுப்பனவு உரித்தில்லாத போதிலும் | குறிப்பிட்ட கொடுப்பனவு பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் மீது செலுத்தப்பட்டிருந்தது. முகாமையாளர்-காணி இற்கு செலுத்தப்பட்டிருந்த | சுற்றறிக்கைக்கு புறம்பாக மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவு அறவிடப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | கூட்டுத்தாபனத்தினால் மீளாய்வாண்டின் போது அந்த தொகுதியை சேர்ந்த உத்தியோகத்தர் இருவருக்கு ரூபா 1,200,000 இற்கான போக்குவரத்து கொடுப்பனவு ரூபா 394,560 இற்கான எரிபொருள் கொடுப்பனவு செலுத்தப்பட்டிருந்தது. | போக்குவரத்து மற்றும் எரிபொருள் கொடுப்பனவு 2022 ஜனவரி மாதம் முதல் நிறுத்தப்பட்டுள்ளது. மேலும் போக்குவரத்து கொடுப்பனவு பெற்றுக் கொண்ட அகக் கணக்காய்வாளர் 2021 மே 21 திகதி சேவையை விட்டு விலகியுள்ளார். தோட்ட அத்தியட்சகர் என நியமனம் பெற்ற உத்தியோகத்தர் அந்த காலப் பகுதியிலே பதில் கடமை அடிப்படையில் முகாமையாளர் - பெருந்தோட்ட பதவியில் கடமையாற்றினார். தோட்ட அதியட்சகர் என்ற அவரின் நியமனம் கடிதத்தின் படி மேற்பார்வை அலுவல்களுக்காக மோட்டார் வாகனம் ஒன்று வழங்க வேண்டி இருந்தமையால் அவருக்கு வழங்க வேண்டிய மேற்பார்வை மோட்டார் வாகனத்திற்கு பதிலாக போக்குவரத்து கொடுப்பனவுகள் வழங்கப்பட்டது. | |
| (ஆ) | 2020 ஜனவரி 27 திகதிய PED 01/2020 இலக்கங் கொண்ட பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரிவு 1.2 | தலைவரின் மாதாந்த எரிபொருள் கொடுப்பனவு 150 லீற்றர்கள் எனினும் அந்த எல்லையினை மிகைத்து பெற்றிருந்த பெறுமதி ரூபா 280,907 இற்கான எரிபொருள் 1,843 லீற்றர்களுக்காக பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் 2022 ஆகஸ்ட் 26 திகதி பெறப்பட்டுள்ளது. | 2020 ஆண்டிற்காக கூட்டுத்தாபனத்தின் தலைவரினால் 2020 ஜனவரி 27 திகதிய PED/01/2020 இலக்கங் கொண்ட பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரிவு 1.2 இன் படி மாதாந்த எரிபொருள் கொடுப்பனவு ஆகிய 150 லீற்றர்கள் எண்ணிக்கையை மிகைத்து பெற்றுக் கொண்டிருந்த எரிபொருளுக்காக 2022.08.26 திகதி நடைபெற்ற பணிப்பாளர் சபை கூட்டத்தில் அங்கீகாரம் பெறப்பட்டது. | சுற்றறிக்கையின் பிரகாரம் மேலதிக எரிபொருளுக்காகபணிப்பாளர் சபையின் பரிந்துரையுடன் வரிசை அமைச்சு செயலாளரின் அங்கீகாரம் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (இ) | 2016 திசெம்பர் 29 திகதிய 30/2016 இலக்கங் கொண்ட பொது நிருவாகச் சுற்றறிக்கையின் பந்தி 3.1 | அனைத்து வாகனங்களும் 12 மாத காலப் பகுதியுள் அல்லது 25,000 கிலோ மீற்றர் ஓட்டத்தின் பின்னர் அல்லது பிரதான திருத்த வேலையின் பின்னர் ஆகிய விடயங்கள் இடையே முதலில் வரும் சந்தர்ப்பத்தின் பின்னர் எரிபொருள் பரிசோதனை ஒன்றில் ஈடுபடுத்தப்பட வேண்டியிருந்த போதிலும் கூட்டுத்தாபனத்தினால் பயன்படுத்தப்படுகின்ற 55 வாகனங்களுக்காக அவ்வாறு எரிபொருள் எரிவு பரிசோதனை மேற்கொண்டிருக்கவில்லை. | கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான ஓட்ட நிலையில் காணப்படும் வாகனங்களின் எரிபொருள் எரிவு பரிசோதனை மேற்கொள்ளல் இதுவரை நடாத்தப்படவில்லை. எவ்வாறாயினும் 2023 ஆண்டில் இந்த எரிபொருள் எரிவுப் பரிசோதனை விடயம் ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கின்றேன். | சுற்றறிக்கையின் பிரகாரம் எரிபொருள் எரிவு தொடர்பான பரிசோதனை மேற்கொள்ள வேண்டும். |
| (ஈ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் - 1645(அ) மற்றும் 2006 ஜூலை 14 திகதிய 11/2006 இலக்கம் கொண்ட பொது நிருவாக சுற்றறிக்கையின் பிரிவு 3(xii) | கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான வாகனங்களுக்காக வாகனங்களுக்கு பொறுப்பான உத்தியோகத்தர்களினால் சம்பவக் குறிப்பேடு பேணிச் செல்ல வேண்டியிருந்த போதிலும் கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான 55 வாகங்களுக்காக அவ்வாறு வாகன சம்பவ குறிப்பேடு பேணிச் சென்றிருக்கவில்லை. | 2021 ஆண்டு முதல் கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான வாகனங்களுக்காக சம்பவக் குறிப்பேடு பேணப்பட்டு வருகின்றது. | வாகனங்களுக்கு பொறுப்பான உத்தியோகத்தர்களினால் சம்பவக் குறிப்பேடு பேணிச் செல்ல வேண்டும். |
| (உ) | 1958 இன் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதியச் சட்டத்தின் பிரிவு 15 மற்றும் 1980 இன் 46 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியச் சட்டத்தின் பகுதி ii பிரிவு 16(i) | 2006 ஆண்டு முதல் ரூபா 413,339,668 தொகைக்கான ஊழியர் சேமலாப நிதியப் பங்களிப்புத் தொகை மற்றும் ரூபா 23,804,025 ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதிய பங்களிப்பு மீளாய்வாண்டு இறுதித் திகதி வரை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்காததுடன் அதன் காரணமாக மீளாய்வாண்டு இறுதித் திகதியில் உள்ளவாறு முறையே ரூபா 43,640,418 தொகை மற்றும் | கூட்டுத்தாபனம் பல வருட காலமாக முகங்கொடுத்துள்ள நிதி நெருக்கடி காரணமாக இந்த பணம் உரிய முறையில் செலுத்துவதற்கு முடியாமையினால் இந்த மிகை விதிப்புத் தொகையினை செலுத்துவதற்கு நேரிட்டிருந்தது. | நிலுவை பங்களிப்புத் தொகையை செலுத்துவதற்கு ஆக்கபூர்வமான வேலைத் திட்டமொன்று தாமதமின்றி தயாரிக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | ரூபா 2,658,745 தொகை மிகை விதிப்பு விதிக்கப்பட்டிருந்தது. | | |
| (ஊ) | 1983 இன் 12 ஆம் இலக்க பணிக்கொடை கொடுப்பனவு சட்டத்தின் பகுதி ii பிரிவு (5)(1) | ஊழியர் ஒருவர் ஓய்வு பெற்ற அல்லது இறப்படைந்த நாள் முதல் 30 நாட்களுக்குள் பணிக்கொடை கொடுப்பனவு செலுத்தப்பட வேண்டியிருந்த போதிலும் கூட்டுத்தாபனத்தினால் அவ்வாறு பணிக்கொடை தொகை குறிப்பிட்ட நாளில் செலுத்தப்படாமையால் 2020 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு செலுத்த வேண்டிய பணிக்கொடை கொடுப்பனவுக் கணக்கின் மீதி ரூபா 402,314,300 இற்கான தொகையொன்று நிலுவையாக காணப்பட்டதுடன் 2020 ஆண்டு இறுதி அளவில் ரூபா 14,296,172 இற்கான மிகை விதிப்புத் தொகை ஒன்று செலுத்த வேண்டியிருந்தது. | கூட்டுத்தாபனம் நீண்ட காலமாக முகங்கொடுத்துள்ள நிதி நெருக்கடி காரணமாக இந்த பணம் உரிய முறையில் செலுத்துவதற்கு முடியாமையினால் இந்த மிகை விதிப்புத் தொகையினை செலுத்துவதற்கு நேரிட்டிருந்தது. | நிலுவை பணிக்கொடை செலுத்துவதற்காக ஆக்கபூர்வமான வேலைத் திட்டமொன்று தாமதமின்றி தயாரிக்க வேண்டும். |
| (எ) | 2018 மார்ச் 19 திகதிய 01/2018 இலக்கங் கொண்ட சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கையின் பந்தி 2 (அ) மற்றும் 2015 ஜூலை 10 திகதிய 02/2015 இலக்கங் கொண்ட அரச நிதிச் சுற்றறிக்கையின் பந்தி 02 | கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான தற்போது பயன்படுத்த முடியாத அகற்றக் கூடிய நிலைமையில் காணப்படும் 20 லொறி வண்டிகள் 24 டிரக்டர் மற்றும் டேலர்கள் 09 கார்கள், 03 ஜீப்கள் மற்றும் 01 நோயாளர் காவு வண்டி, 01 முச்சக்கர வண்டி மற்றும் 36 மோட்டார் சைக்கிள் ஆக மொத்தம் 58 வாகனங்கள் 2022 திசெம்பர் 17 திகதி அளவிலும் அகற்றுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான பயன்படுத்த முடியாத அகற்றக் கூடிய நிலைமையில் காணப்பட்ட வாகனங்களை அகற்றும் அலுவல்கள் 2023 ஆண்டில் ஆரம்பிக்கப்படும். | சுற்றறிக்கையின் அறிவுரையின் பிரகாரம் பயன்படுத்த முடியாத வாகனங்களை அப்புறப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஏ) | 2014 பெப்ரவரி 11 திகதிய 01/2014 இலக்க கொண்ட அரச நிதிச் சுற்றறிக்கையின் | நிதியாண்டு ஆரம்பிப்பதற்கு 15 நாட்களுக்கு முன்னர் முன்வரும் ஆண்டின் போது செயற்படுத்துவதற்கு எதிர்பார்க்கும் வாணிப | கூட்டுத்தாபனத்தின் 2023 ஆண்டிற்கான வர்த்தக திட்டமொன்று மற்றும் அதன் அடிப்படையிலான செயல் நடவடிக்கைத் | குறிப்பிட்ட சுற்றறிக்கையின் பிரகாரம் வர்த்தக திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | பந்தி 5 (2) மற்றும் 2003 ஜூன் 02 திகதிய 12 ஆம் இலக்க அரச தொழில் முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரிவு 5.1.3 | தொழிற்பாடுகள் உள்ளடங்கிய வர்த்தக திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் தயாரிக்கப்பட்டு பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் பின்னர் வரிசை அமைச்சு, பொது தொழில் முயற்சிகள் தொடர்பான திணைக்களம், திறைசேரி மற்றும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் அவ்வாறான அறிக்கை ஒன்று தயாரிக்கப்பட்டு இருக்கவில்லை. | திட்டமொன்று தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (ஐ) | 2014 பெப்ரவரி 11 திகதிய 01/2014 இலக்கங் கொண்ட அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரிவு 5 (2) | வர்த்தக திட்டத்தை அடிப்படையாகக் கொண்டு முன்வரும் நிதியாண்டில் செயற்படுத்த எதிர்பார்க்கும் வாணிப தொழிற்பாடுகள் உள்ளடங்கிய செயல் நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் கூட்டுத்தாபனம் 2020 ஆண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டம் ஒன்று தயாரித்திருக்கவில்லை. | கூட்டுத்தாபனத்தின் 2023 ஆண்டிற்கான வர்த்தக திட்டமொன்று மற்றும் அதன் அடிப்படையிலான செயல் நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | குறிப்பிட்ட சுற்றறிக்கையின் பிரகாரம் வர்த்தக திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஒ) | 2003 ஜூன் 02 திகதிய 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | | | |
| (I) | பிரிவு 4.2.3 மற்றும் 4.2.6 | செயறலாற்றுகை அறிக்கை/ முன்னேற்ற அறிக்கை தயாரிக்கப்பட்டு காலாண்டு, அரையாண்டு மற்றும் வருடாந்த அடிப்படையில் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் கூட்டுத்தாபனம் அவ் அறிக்கைகள் தயாரித்திருக்கவில்லை. | 2023 ஆம் ஆண்டிற்காக தயாரிப்பதற்காக தீர்மானிக்கப்பட்டுள்ள செயல் நடவடிக்கைத் திட்டத்தின் படி காலாண்டு அரையாண்டு வருடாந்த செயலாற்றுகைகைய மதிப்பாய்வு செய்வதற்கு அந்த அறிக்கைகள் உரிய நிறுவனங்களுக்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சுற்றறிக்கையின் பிரகாரம் காலாண்டு மற்றும் அரையாண்டு செயலாற்றுகை அறிக்கைகள் தயாரிக்கப்பட வேண்டும். |
| (II) | பிரிவு 5.2.5 | வருடாந்த பாதீடு நிதியாண்டு ஆரம்பிப்பதற்கு 15 நாட்களுக்கு முன்னர் | 2020 ஆண்டிற்குரிய பாதீடு தயாரிப்பதில் தாமதம் ஒன்று காணப்பட்ட | குறிப்பிட்ட சுற்றறிக்கையின் பிரகாரம் முன்வரும் ஆண்டிற்கான |

| | | | | |
|---|---|---|---|---|
| | | தயாரிக்கப்பட்டு பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் பின்னர் வரிசை அமைச்சான பெருந்தோட்ட அமைச்சு, அரச தொழில் முயற்சிகள் தொடர்பான திணைக்களம், திறைசேரி மற்றும் கணக்காய்வாளர் தலைமை அதிபதித் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் கூட்டுத்தாபனத்தினால் வருடாந்த பாதீடு தாமதமாக தயாரிக்கப்பட்டு 2020 பெப்ரவரி 12 திகதி பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்டு உரிய நிறுவனங்களுக்கு அனுப்பப்பட்டிருந்தது. | போதிலும் 2020 பாதீட்டிற்காக 2020.02.12 திகதி நடைபெற்ற பணிப்பாளர் சபைக் கூட்டத்தில் அங்கீகாரம் பெறப்பட்டிருந்தது. | பாதீடு உரிய நேரத்தில் தயாரிக்கப்பட்டு உரிய தரப்பினர்களுக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (ஓ) | ஜனாதிபதி செயலகத்தினால் வெளியிடப்பட்ட 1995 ஜூலை 25 திகதிய எஸ்ஏஜ/ஏ/1/34 இலக்கங் கொண்ட அரச காணிகள் தொடர்பான வழிகாட்டலின் பிரிவு 7 | அரச காணிகளை குத்தகைக்கு கொடுக்கும் போது அரச பிரதான விலை மதிப்பாளரினால் தீர்மானிக்கப்பட்ட சந்தைப் பெறுமதி அடிப்படையில் குத்தகைத் தொகை ஒன்று தீர்மானிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் கூட்டுத்தாபனம் சுயாதீன தொலைக்காட்சி நிறுவனத்திற்கு குத்தகை அடிப்படையில் வழங்கியிருந்த 2 ரூட்கள் 2.87 பர்சஸ்கள் மற்றும் ஹுன்னஸ்போல ஹோட்டல் லிமிடட் இற்கு வழங்கியிருந்த 2 ரூட் 6 பர்சஸ் (கம்மடுவ மற்றும் ஹுன்னஸ்கிரிய தோட்டத் தொகுதிகளில்) 2022 மார்ச் 02 திகதி அளவிலும் அரச பெறுமதி மதிப்பீடு ஒன்று பெற்றுக் கொண்டிருக்கவில்லை எனவும், ஓபலகல அரச தோட்டத் தொகுதியின் 1 ரூட் 39.07 பர்சஸ் தொகை டயலொக் ப்ரோட்பேன்ட் நெர்வேர்க் தனியார் | கூட்டுத்தாபத்திற்கு சொந்தமான கம்மடுவ தோட்டத் தொகுதியில் 2 ரூட் 2.87 பர்சஸ் சுயாதீன தொலைக்காட்சி நிறுவனத்திற்கு குத்தகைக்கு வழங்கும் போது குத்தகை உடன்படிக்கை ஒன்று கையொப்பமிட்டிருக்காதது டன் அரச பெறுமதி மதிப்பீட்டின் அடிப்படையில் குத்தகைக் தொகை ஒன்றும் அறவிடப்படவில்லை. ஹுன்னஸ்கிரிய தோட்டத் தொகுதியில் ஹுன்னர்போல் ஹோட்டல் லிமிடட் இற்கு 2 ரூட் 6 பர்சஸ் காணி ஹோட்டல் நுழைபாதைக்காக குத்தகை உடன்படிக்கை ஒன்றின் மூலம் 50 வருடங்களுக்காக குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது. குறிப்பிட்ட குத்தகைத் தொகையை தீர்மானிக்கும் போது விலை மதிப்பு திணைக்களத்தின் மூலம் | குறிப்பிட்ட வழிகாட்டலுக்கு இணங்க பிரதான விலைமதிப்பீட்டாளரின் பெறுமதி மதிப்பீடு ஒன்றின் படி குத்தகை தொகை தீர்மானிக்கப்பட வேண்டும். அதன் படி நிலுவைக் குத்தகைத் தொகை தாமதமின்றி அறவிடப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | கம்பனிக்கு குத்தகை அடிப்படையில் கொடுக்கும் போது வருடாந்த குத்தகை தொகை பிரதான விலை மதிப்பீட்டாளரினால் தீர்மானிக்கப்பட்ட சந்தை விலையின் பெறுமதி அடிப்படையில் கணிக்கப்படாத காரணத்தினால் மீளாய்வாண்டு வரை கூட்டுத்தாபனத்திற்கு ரூபா 6,853,120 இற்கான குத்தகை வருமானம் ஒன்றினை இழந்திருந்தது என அவதானிக்கப்பட்டது. | பெறுமதி மதிப்பீட்டு அறிக்கை ஒன்று பெற்றிருக்கவில்லை. ஓபல்கல அரச தோட்டத் தொகுதியில் 01 ரூட் 39.07 பர்சஸ் காணி டயலொக் ப்ரோட்பேன்ட் (தனியார்) கம்பனிக்கு குத்தகைக்கு வழங்கும் போது பெறுமதி மதிப்பீட்டு பெறுமதியை விட குறைந்த தொகையொன்று குறிப்பிட்ட உடன்படிக்கையில் காட்டப்பட்டிருந்தது. இது தொடர்பாக பணிப்பாளர் சபைக்கு அறிவித்து அவர்களின் அறிவுரைகளின் படி தொடர்நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (ஔ) | 1979 இன் 49 இலக்க இலங்கை அரச பெருந்தோட்ட கூட்டுத்தாபன (திருத்திய) சட்டத்தின் உப பிரிவு 07(1)ஏ | ஹுன்னஸ்கிரிய தோட்டத் தொகுதியில் இருந்து 2 ரூட் 6 பர்சஸ் காணி ஹுன்னஸ்போல் ஹோட்டல் லிமிடட் இற்கு 50 வருட காலத்திற்காக அமைச்சரின் பூர்வாங்க எழுத்துமூல அங்கீகாரம் இன்றி குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டிருந்தது. | கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான ஹுன்னஸ்கிரிய தோட்டத் தொகுதியில் இருந்து 02 ரூட் 06 பர்சஸ் காணி ஹுன்னஸ்போல் ஹோட்டல் லிமிடட் இற்கு குத்தகைக்கு கொடுக்கும் போது அமைச்சரின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படவில்லை. இது தொடர்பாக பணிப்பாளர் சபையை அறிவுருத்தி அதன் ஆலோசனையின் படி உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | சட்டத்தின் பிரகாரம் அமைச்சரின் அங்கீகாரம் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 1.8 நிதி முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் நி.பி. 395(ஆ) பிரகாரம் வங்கி நடைமுறைக் கணக்கிற்காக ஒரு மாதம் முடிவடைந்து பின்னர் தொடர்ந்து வரக்கூடிய மாதத்தின் 15 திகதி அல்லது அதற்கு முன்னர் வங்கி இணக்கக் கூற்று தயாரிக்கப்பட | 2021 ஆண்டு முதல் மாதாந்த வங்கி இணக்கக் கூற்று தயாரிக்கும் போது அவற்றை தயாரிக்கப்பட்ட திகதி குறிப்பிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் வங்கி இணக்கக் கூற்றுகள் குறிப்பிட்ட காலத்தில் தயாரிப்பதை உறுதிப்படுத்தக்கூடியவாறு அவற்றை சான்றுபடுத்தும் |

| | | |
|---|---|---|
| வேண்டியிருந்த போதிலும் கூட்டுத்தாபனத்தினால் தயாரிக்கப்பட்டிருந்த இணக்கக்கூற்று திகதி குறிப்பிடப்படாமையால் அந்த விதிக்கு இணங்க செயற்பட்டிருக்கின்றதா என பரிசோதனை மேற்கொள்ள முடியாதிருந்ததுடன், 14 வங்கிக் கணக்குகள் தொடர்பாக வங்கி இணக்கக் கூற்றுகள் மற்றும் வங்கிக் கூற்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பித்திருக்கவில்லை. | | சந்தர்ப்பத்தில் திகதி குறிப்பிடப்பட வேண்டும். |

## 1.9 வரி பிரமாணங்களுடன் இணங்காமை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2006 இன் 10 இலக்க உள்நாட்டு இறைவரி (திருத்திய) சட்டத்தின் பிரிவு 113 இன் பிரகாரம் தனிநபர் ஒருவர் அல்லது பங்குடைமை வியாபாரம் ஒன்று சுய பெறுமதி மதிப்பீட்டு அடிப்படையில் காலாண்டு இறுதியில் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு முறையே ஆகஸ்ட் 15, நவம்பர் 15, பெப்ரவரி 15 மற்றும் அடுத்த ஆண்டு மே 15 ஆகிய திகதிகளில் அல்லது அதற்கு முன்னர் மீதி வரித்தொகை காணப்படின் அதனை அடுத்த ஆண்டு செப்தம்பர் 30 திகதி அல்லது அதற்கு முன்னர் செலுத்த வேண்டியிருந்த போதிலும், கூட்டுத்தாபனம் 2020/2021 மதிப்பீட்டுக்குரிய வருமான வரி 2021 திசெம்பர் 31 திகதி அளவிலும் கணித்திருக்கவில்லை. | நிறுவனம் நீண்ட காலம் முதல் முகம்கொடுக்கும் நிதி நெருக்கடி காரணமாக நிறுவனத்தினால் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு செலுத்த வேண்டிய வரி தொடர்பாக மற்றும் வருமான வரி திரட்டு அனுப்புவது தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. அதனால், இது தொடர்பாக பணிப்பாளர் சபையை அறிவுறுத்தி அதன் அறிவுரையின் படி தொடர் நடவடிக்கை எடுக்கப்படும். | வருமான வரி (திருத்திய) சட்டத்தின் பிரகாரம் வருமான வரியை கணித்து உரிய திரட்டுக்கள் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்க வேண்டும். |
| (ஆ) | 2006 இன் 10 இலக்க உள்நாட்டு இறைவரி (திருத்திய) சட்டத்தின் பிரிவு 106 இன் பிரகாரம் வருமான வரி திரட்டுக்கள் தொடர்ந்து வரும் ஆண்டின் நவம்பர் 30 திகதி அல்லது அதற்கு முன்னர் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு ஒப்படைக்க வேண்டியிருந்த போதிலும் கூட்டுத்தாபனம் 2020/2021 மதிப்பீட்டு ஆண்டிற்குரிய வருமான வரி திரட்டுக்கள் 2021 திசெம்பர் 30 திகதி அளவிலும் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு ஒப்படைத்திருக்கவில்லை. | நிறுவனம் நீண்ட காலம் முதல் முகம்கொடுக்கும் நிதி நெருக்கடி காரணமாக நிறுவனத்தினால் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு செலுத்த வேண்டிய வரி தொடர்பாக மற்றும் வருமான வரி திரட்டு அனுப்புவது தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. அதனால், இது தொடர்பாக பணிப்பாளர் சபையை அறிவுறுத்தி அதன் அறிவுரையின் படி தொடர் நடவடிக்கை எடுக்கப்படும். | வருமான வரி (திருத்திய) சட்டத்தின் பிரகாரம் வருமான வரியை கணித்து உரிய திரட்டுக்கள் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்க வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 149,627,081 இற்கான நட்டமொன்று காணப்பட்டதுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் நட்டம் ரூபா 329,884,391 தொகை ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 180,257,310 இற்கான நட்டத்தில் குறைவொன்று ஏற்பட்டிருந்தது என அவதானிக்கப்பட்டது. இந்த நட்டத்தில் குறைவடைதலுக்காக முன்னைய ஆண்டிற்கு நேரொப்ப மீளாய்வாண்டின் போது கூட்டுத்தாபனத்தின் தேயிலை கொழுந்து, சிறு பயிர்கள் மற்றும் இறப்பர் விற்பனை வருமானம் ரூபா 230,902,542 இனால் அதிகரித்தல் பிரதான காரணமாக இருந்தது.

### 2.2 பிரதான வருமான விடயங்களின் போக்கு பகுப்பாய்வு

| | 2020 | 2019 | அதிகரித்தல் / (குறைவடைதல்) |
|---|---|---|---|
| வருவாய் | 766,835,580 | 535,933,037 | 230,902,543 |
| ஏனைய வருமானங்கள் | 158,478,281 | 106,974,735 | 51,503,546 |
| விற்பனவுக் கிரயம் | (864,752,760) | (786,607,907) | 78,144,853 |
| நிருவாகச் செலவு | (180,887,340) | (165,473,851) | 15,413,489 |
| நிதிச் செலவுகள் | (29,300,841) | (20,710,404) | 8,590,437 |

### 2.3 விகிதாசார பகுப்பாய்வு

(அ) மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டின் நடைமுறை சொத்து விகிதாசாரம் 0.20:1 தொகையாக காணப்பட்டதுடன், திடீர் சொத்து விகிதாசாரம் 0.15:1 ஆக காணப்பட்டது. மீளாய்வாண்டில் மற்றும் முன்னைய ஆண்டில் தலைமை அலுவலகத்தின் மற்றும் தோட்டத் தொகுதிகளில் வர்த்தக மற்றும் ஏனைய செலுத்த வேண்டிய மீதிகளின் பெறுமதி முறையே ரூபா 1,363,998,504 தொகை மற்றும் ரூபா 1,318,555,797 தொகையாக காணப்பட்டமை நடைமுறை சொத்துக்கள் மற்றும் திடீர் சொத்து விகிதாசாரம் மோசமடைவதற்கு காரணமாக இருந்தது.

(ஆ) 2020 ஆண்டின் மொத்த நட்ட சதவீதம் மற்றும் தேறிய நட்ட சதவீதம் முறையே 13 சதவீதம் மற்றும் 20 சதவீதத்துக்கு இடைப்பட்டிருந்ததுடன், கடந்த ஆண்டின் போது அந்த சதவீதங்கள் முறையே 47 சதவீதம் மற்றும் 62 சதவீதமாக காணப்பட்டமையால் மீளாய்வாண்டில் அந்த விகிதாசாரம் 34 சதவீத்தினால் மற்றும் 42 சதவீதத்தினால் குறைவடைந்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ திறமையின்மை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கண்டி, காலி மற்றும் மாத்தளை மாவட்டங்களுக்குரிய கூட்டுத்தாபனத்தினால் நிருவகிக்கப்படும் 08 தோட்டத் தொகுதிகளில் 450 பர்சஸ் காணி தரைப் பகுதியொன்று மற்றும் மிட்லன்ட் தோட்டத் தொகுதியில் 2 உத்தியோகபூர்வ வாசஸ்தலங்களும், ஹுன்னஸ்கிரிய தோட்டத் தொகுதியில் 2 உத்தியோகபூர்வ வாசஸ்தலங்களும் 28 | தோட்டங்களில் 450 பர்சஸ் காணிப் பகுதியொன்றில் வதியும் ஆட்களில் 5 பர்சஸ் நிலப் பகுதியொன்று வதிவோரினால் அனுபவிக்கும் நபரிடம் அந்தப் பூமிப் பகுதியை மீண்டும் உரித்தாக்கப்பட்டுள்ளது. அதே போல் கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள | அங்கீகாரமற்ற வதிவோர் தொடர்பா சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வருடங்களுக்கு அண்மித்த காலம் அங்கீகாரமற்ற வதிவோரினால் அனுபவிக்கப்பட்டு வருகின்றது என அவதானிக்கப்பட்டது. | ஏனைய அங்கீகாரமற்ற வதிவோருக்கு எதிராக தற்போது வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. | |
| (ஆ) | கூட்டுத்தாபனம் மீளாய்வாண்டு இறுதி அளவில் குத்தகை அடிப்படையில் வழங்கியிருந்த ஆதனங்களுக்காக குத்தகையாளர்களிடம் ரூபா 8,911,700 இற்கான குத்தகை வருமானமொன்றினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | கூட்டுத்தாபனத்தினால் 2020 பெப்ரவரி 06 திகதிக்கு முன்னர் பல்வேறு தரப்பினர்களுக்கு குத்தகைக்கு வழங்கியிருந்த காணிகளில் இருந்து உரிய முறையில் அரச விலை மதிப்பீட்டின் மீது குத்தகை அறவிடப்படாத காணிகள் தொடர்பாக விபரங்கள் பணிப்பாளர் சபைக்கு சமர்ப்பித்து அதன் அறிவுரையின் படி உரிய நடவடிக்கை எடுக்கப்படும். | நிலுவை குத்தகைத் தொகையை அறவீடு செய்வதற்கு உடன்படிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.2 செயற்பாட்டுத் திறமையின்மை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பெருந்தோட்டத்தொழில் அமைச்சின் தரவுகளின் படி 2020 ஆண்டில் இலங்கையின் ஹெக்டயருக்கான நியம வருடாந்த முடிவுற்ற விலைச்சல் 1377 கிலோகிராம் தொகை எனினும் கூட்டுத்தாபத்தினால் நிருவகிக்கப்படும் 15 தோட்டங்களின் விளைச்சல் 103 கிலோகிராமுக்கும் 992 இற்கும் இடைப்பட்ட மிகவும் குறைந்த வீச்சில் காணப்பட்டது. | 2019 ஆண்டிற்கு நேரொப்ப 2020 மற்றும் 2021 ஆண்டுகளின் போது கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான தோட்டங்களில் தேயிலை விளைச்சலை கணிசமான மட்டத்தில் அதிகரிப்பதற்கு இயலுமாக இருந்தது. | கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான விளைச்சல் துறையில் நியம சராசரி விளைச்சலை நெருங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமாக 4,189 ஹெக்டயர் தேயிலை பயிர் செய்கை ஒன்று காணப்பட்ட போதிலும் அவற்றில் 2838 ஹெக்டயர்கள் 100 வருடங்களை விட பழமை வாய்ந்த மீள் பயிர்செய்கை மேற்கொள்ள வேண்டிய தேயிலை பயிர்செய்கையாக காணப்பட்டதுடன் அவற்றில் 135 ஹெக்டயர்கள் மாத்திரம் மீள் பயிர்செய்கைக்கு ஈடுபடுத்தப்பட்டிருந்தது. | கூட்டுத்தாபனத்தின் கோவையின் படி 2020 அளவில் நிறுவனத்திற்கு சொந்தமான தேயிலை காணி எண்ணிக்கை 4,189.06 ஆகக் காணப்பட்டதுடன், அவற்றில் 2,838 ஹெக்டயர்கள் 100 வருடங்களுக்கு மிகையான பழமையான தேயிலை பயிர்செய்கைகளாகும். அவற்றில் 180 ஹெக்டயர்கள் மீள்பயிர்சை அலுவல்கள் வரிசை அமைச்சின் நிதி ஏற்பாடுகளை பயன்படுத்தி தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது. | மிகவும் பழமை வாய்ந்த பயிர்களை அகற்றி கூடிய விளைச்சலை உடைய மீள்பயிர்செய்கையில் ஈடுபடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | வெளி பயிர் செய்கையாளர்களுக்கு வழங்கியிருந்த 1,356 ஹெக்டயர்களில் | கூட்டுத்தாபனத்தின் கோப்புக்களின் படி 2019 | தேயிலை கைத்தொழிலின் |

| | | | |
|---|---|---|---|
| | உற்பத்தி செய்திருந்த ஒட்டுமொத்த முடிவுற்ற தேயிலை உற்பத்தி, 2019 ஆண்டின் போது 99,850 கிலோகிராம்களாக காணப்பட்டதுடன், அவை 2020 ஆண்டில் 157,987 கிலோகிராம்களாக காணப்பட்டது. பெருந்தோட்ட தொழில் அமைச்சின் மூலம் சமர்ப்பிக்கப்பட்டிருந்த தேயிலை தொழிற்துறையின் தரவுகளின் படி மேற்கூறிய காணி எண்ணிக்கையில் வருடாந்த நியம முடிவுற்ற தேயிலை உற்பத்தி 1,867,212 கிலோகிராம்களாக காணப்பட்ட போதிலும் வெளி பயிர்செய்கையாளர்களினால் உற்பத்தி செய்யப்பட்டிருந்தது ஒட்டு மொத்த விளைச்சளில் 8 சதவீதமாக காணப்பட்டமை சர்ச்சைக்குரிய தன்மையுடைய விடயம் ஒன்று என அவதானிக்கப்பட்டது. | ஆண்டின் போது வெளி பயிர்செய்கையாளர்களுக்கு வழங்கியிருந்த காணியின் எண்ணிக்கை 1,391 ஆகக் காணப்பட்டதுடன், அந்த வருடத்தில் வெளிப் பயிர் செய்கையாளர்களின் ஒட்டுமொத்த தேயிலை உற்பத்தி 99,850 கிலோகிராம்கள் ஆகும். அந்த உற்பத்தி 2020 மற்றும் 2021 ஆண்டுகளின் போது முறையே 157,987 கி.கிராம், 170,645 கி.கிராமாக காணப்பட்டது. அதன்படி 2019 ஆண்டிற்கு ஒப்பாக 2020 மற்றும் 2021 ஆண்டுகளின் போது தேயிலை உற்பத்தி கணிசமான முன்னேற்றமொன்றினை பெற்றுக்கொள்ள கூடியதாக இருந்தது. 2020 வருட ஆரம்பம் முதல் உரம் பெற்றுக்கொள்வதில் சிக்கல் தன்மை ஒன்று காணப்பட்ட காரணத்தினால் உரம் பெற்றுக் கொள்ளும் சிக்கல் நிலைமை நிலவிய காரணத்தினால் எதிர்பார்த்தவாறு தேயிலை உற்பத்தியை அதிகரித்துக்கொள்வதற்கு முடியாமல் இருந்தது. | வருடாந்த நியம முடிவுற்ற தேயிலை உற்பத்தியை நெருங்குவதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | பெருந்தோட்ட தொழில் அமைச்சின் புள்ளிவிபரங்களின் படி 2020/2021 ஆண்டுகளுக்குரிய வெளியிட்டிருந்த தரவுகளின் படி இலங்கையின் தேயிலை கிலோகிராம் ஒன்றிற்கான சராசரி உற்பத்திக் கிரயம் ரூபா 548 தொகையாக காணப்பட வேண்டியிருந்த போதிலும் கூட்டுத்தாபனத்தினால் நிருவகிக்கப்படும் 8 தோட்டங்களின் கிலோகிராம் அலகிற்கான உற்பத்திக் கிரயம் ரூபா 575 - ரூபா 1,974 இற்கான வீச்சில் காணப்பட்டது. | கணக்காய்வு அறிக்கையில் தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களத்தினால் 2018/ 2019 ஆண்டுகளுக்குரிய வெளியிடப்பட்டிருந்த தரவுகளின் படி இலங்கையின் கிலோகிராம் ஒன்றின் சராசரிக் கிரயம் ரூபா 484 தொகை என காட்டப்பட்டிருந்த போதிலும் பெருந்தோட்ட தொழில் அமைச்சின் புள்ளிவிபரங்களின் படி 2020 ஆண்டிற்குரிய இலங்கையின் தேயிலை கி.கி. ஒன்றிற்கான சராசரி உற்பத்தி கிரயம் ரூபா 547.77 ஆகும். கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு 9 தோட்டத் தொகுதிகளில் | தேயிலை கிலோகிராம் ஒன்றிற்கான சராசரி கிரயம் ஆக்கபூர்வமான மட்டத்தில் பேணிச் செல்ல வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | வருடாந்த உற்பத்தி அலகுக் கிரயம் ரூபா 500 முதல் ரூபா 1974 வரையான வீச்சில் காணப்பட்டது. | |
| (உ) | கூட்டுத்தாபனத்தின் பாதீட்டின் படி 2020 ஆண்டில் எதிர்பார்த்த உற்பத்தி 1,814,592 கிலோகிராம் எண்ணிக்கையில் 1,584,373 கிலோ கிராம்கள் பெற்றிருந்ததுடன் அது எதிர்பார்த்த உற்பத்தியல் 87 சத எண்ணிக்கையாகும். | 2020 ஆண்டு ஆரம்பம் முதல் உரம் பெற்றுக் கொள்வதில் சிக்கல் நிலைமை ஒன்று காணப்பட்ட காரணத்தினால் எதிர்பார்த்தவாறு தேயிலை உற்பத்தியை அதிகரித்துக் கொள்வதற்கு முடியாமல் இருந்தது. | தேயிலை உற்பத்தியின் எதிர்பார்த்த இலக்குகளை நெருங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஊ) | தேயிலை ஏற்றுமதி சங்கத்தினால் 2020 ஆண்டு தொடர்பாக இணையத்தில் வெளியிடப்பட்டிருந்த தரவுகளின் படி தேயிலை கிலோகிராம் ஒன்றின் நியம சராசரி விற்பனைப் பெறுமதி ரூபா 631 தொகையாக இருக்க வேண்டியிருந்த போதிலும் கூட்டுத்தாபனத்தினால் அந்த பெறுமதி ரூபா 386 இற்கும் ரூபா 470 இற்கும் இடைப்பட்ட குறைந்த வீச்சில் காணப்பட்டது. | கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான தோட்டங்கள் தொடர்பாக 2020 ஆண்டிற்கான தேறிய விற்பனவு சராசரி (NSA) ரூபா 386 - ரூபா 470 வீச்சில் காணப்பட்டது. | தேயிலை கிலோகிராம் ஒன்றின் விற்பனை விலையினை அதிகரிப்பதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (எ) | கூட்டுத்தாபனத்தின் 17 தோட்டத் தொகுதிகள் தொடர்பாக மொத்த காணியின் எண்ணிக்கை 11,012 ஹெக்டயர்களாக காணப்பட்ட போதிலும், அவற்றில் தேயிலைக்காக 4,189 ஹெக்டயர்களும், இறப்பருக்காக 65 ஹெக்டயர்களும், சிறு ஏற்றுமதி பயிர்களுக்காக மற்றும் காடு வளர்ப்பிற்காக 2,471 ஹெக்டயர்களும் ஈடுபடுத்தப்பட்டிருந்தது. மீதிக் காணி 4,288 ஹெக்டயர்கள் அதாவது 39 சதவீதம் எதுவித வருமானமும் உழைப்பதற்காக பங்குபடுத்தப்படாமல் விளைவற்றுக் காணப்பட்டது என அவதானிக்கப்பட்டது. | 2020 ஆண்டளவில் கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான காணி 11,012 ஹெக்டயர்கள் காணப்பட்டதுடன், அவற்றில் தேயிலை பயிர்செய்கைக்காக 4,189.06 ஹெக்டயர்களும், இறப்பர் பயிர்செய்கைக்காக 64.56 ஹெக்டயர்களும் சிறு ஏற்றுமதி பயிர்கள் மற்றும் காடு வளர்ப்புக்காக 2471.38 ஹெக்டயர்களும் ஒதுக்கப்பட்டிருந்தது. தரிச நிலம், காடுகள் கற்குன்றுகள் மற்றும் நக்கல்ஸ் காப்பு வலயத்தில் அமைந்துள்ள காணி அளவும் உட்பட உற்பத்தி செய்யப்படாத காணி எண்ணிக்கை 4,287.70 ஹெக்டயர்களாகும். பயிர் செய்யப்படாத காணியில் கூடிய சதவீதம் நக்கல்ஸ் காப்பு வலயத்தில் அமைந்துள்ளமையால் அந்த பகுதியில் பயிர்செய்கை ஏதும் மேற்கொள்ள முடியாது. | கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான காணிகளை ஆக்கபூர்வமாக பயன்படுத்துவதற்கு விரைவான நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஏ) | 2012 ஆண்டில் கூட்டுத்தாபனத்தின் முடிவுற்ற தேயிலை உற்பத்தி 1,911,616 கிலோகிராம்களாக காணப்பட்டதுடன் அவை மீளாய்வாண்டு அளவில் 1,742,360 கிலோகிராம்கள் வரை 6 வருடங்களில் 169,256 கிலோகிராம்களினால் அதாவது 9 சதவீதத்தினால் குறைவடைந்திருந்ததுடன் அது 2020 ஆண்டின் நியம விளைச்சளில் 30 சதவீதமாகும். | கூட்டுத்தாபன கோவைகளின் படி 2012 ஆண்டின் கூட்டுத்தாபனத்தின் முடிவுற்ற தேயிலை உற்பத்தி (வெளி பயிர்செய்கையாளர் பெற்றிருந்த உற்பத்தி உட்பட) 2,102,344 கிலோகிராம்களாக காணப்பட்டது. அதே போல் 2020 மற்றும் 2021 ஆண்டுகளின் போது கூட்டுத்தாபனத்தின் முடிவுற்ற தேயிலை உற்பத்தி முறையே 1,742,363 கி.கி. மற்றும் 1,803,226 கி.கி. ஆகும். 2020 மற்றும் 2021 ஆண்டுகளின் போது கூட்டுத்தாபனத்தினால் தேயிலை பயிர் செய்கைக்காக ஒதுக்கப்பட்டிருந்த காணிகளின் எண்ணிக்கை முறையே 4,189.06 ஹெக்டயர்கள் மற்றும் 4,199.74 ஆகும். பெருந்தோட்டத் தொழில் அமைச்சின் புள்ளி விபரங்களின் படி கூட்டுத்தாபனத்தின் 2020 மற்றும் 2021 ஆண்டுகளில் பெற்றிருந்த முடிவுற்ற தேயிலை உற்பத்தி, நியம முடிவுற்ற தேயிலை உற்பத்தியில் சதவீதமாக கணித்த போது முறையே 30% மற்றும் 31 % ஆகக் காணப்பட்டது. | கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான காணிகளின் மூலம் கூடிய விளைச்சல் ஒன்றை பெற்றுக் கொள்வதற்கு விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஐ) | இறப்பர் ஆராய்ச்சி நிறுவனத்தினால் வெளியிடப்பட்ட தரவுகளின் படி 2020 ஆண்டின் ஹெக்டயர்களுக்காக காணப்பட வேண்டிய சராசரி இறப்பர் மரங்களின் எண்ணிக்கை 516 ஆகக் காணப்பட்டமையால் வலகந்துவ தோட்டத் தொகுதியில் 65 ஹெக்டயர்கள் காணியில் காணப்பட வேண்டிய இறப்பர் மரங்களின் எண்ணிக்கை 33,540 தொகை எனினும் உண்மையில் காணப்பட்ட இறப்பர் மரங்களின் எண்ணிக்கை 18,634 ஆகும். அவை இருக்க வேண்டிய எண்ணிக்கையில் 55 சதவீதமாகும். மேலும் 2020 ஆண்டின் போது ஹெக்டயர் ஒன்றிற்கான சராசரி இறப்பர் உற்பத்தி 608 கி.கிராம்களாக காணப்பட்ட போதிலும் வலகந்துவ தோட்டத் தொகுதியில் ஹெக்டயர் ஒன்றிற்கான சராசரி இறப்பர் உற்பத்தி | இலங்கை இறப்பர் ஆராய்ச்சி நிறுவனத்தின் தரவுகளின் படி ஹெக்டயர் ஒன்றில் நடக் கூடிய வேண்டிய இறப்பர் கன்றுகளின் எண்ணிக்கை 516 தொகை ஆகக் காணப்பட்டதுடன், வெற்றியளிக்காக கன்றுகளின் எண்ணிக்கைகை கவனத்தில் எடுத்த போது ஹெக்டயருக்கான சராசரி காணப்படும் இறப்பர் மரங்களின் எண்ணிக்கை 300-500 இடைப்பட்ட எண்ணிக்கையாக இருந்தது. எவ்வாறாயினும் கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான வலகந்துவக தோட்டத் தொகுதியின் ஹெக்டயருக்கான சராசரி இறப்பர் உற்பத்தி 456 கி.கிராம்கள் ஆகும். | தொழிலின் நியமங்களின் படி இறப்பர் கன்றுகள் மற்றும் இறப்பர் உற்பத்தி உச்ச மட்ட அளவில் பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

456 கிலோகிராம்கள் அதாவது 75 சதவீத பெறுமதியினை கொண்டிருந்தது.

### 3.3 பெறுகை முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| பெறுகை திட்டத்தின் பெறுகை வழிகாட்டல் கோவையின் பிரிவு 4.2.1 இன் பிரகாரம் தோட்டத் தொகுதிகளில் நிலையான சொத்துக்கள் கொள்வனவு தொடர்பாக அதிகார கையளிப்பு மட்டம் ஆரம்பிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்ட திகதி முடிவடைவதற்கு எதிர்பாக்கப்பட்ட திகதி ஆகிய விபரங்கள் உற்படுத்தப்பட்டிருக்கவில்லை. | கூட்டுத்தாபனம் முகம் கொடுத்துள்ள நிதி நெறுக்கடி காரணமாக நிறுவனத்தின் நிலையான சொத்துக்கள் கொள்வணவு செய்தல் தொடர்பாக சரியான எதிர்வு கூறல் மேற்கொள்வதற்கு முடியாமல் இருந்தது. எவ்வாறாயினும் 2023 ஆண்டிற்குறிய பெறுகைத் திட்டம் தயாரிக்கும் போது தோட்டத் தொகுதிகளின் நிலையான சொத்துக்கள் கொள்வனவு செய்தலும் உற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பெறுகை வழிகாட்டல் கோவையின் 4.2.1 (ஆ) இல் காட்டப்பட்டுள்ள தகவல்கள் பெறுகைத் திட்டத்தில் உட்படுத்தப்பட வேண்டும். |

### 3.4 மனித வள முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | முகாமைத்துவ சேவைத் திணைக்களத்தின் 2017 ஜுலை 25 ஆந் திகதி, 2017 செப்டம்பர் 13 ஆந் திகதிய, 2018 திசெம்பர் 21 ஆந் திகதிய மற்றும் 2019 செப்டம்பர் 09 ஆந் திகதிய கடிதங்ளின் பிரகாரம் இலங்கை அரச பெருந்தோட்ட கூட்டுத்தாபணத்தின் தலைமை அலுவலக அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் நிரந்த பதவிகள் 109, ஒப்பந்த அடிப்படை பதவிகள் 03, மற்றும் தற்காலிக பதவிகள் 02 எனினும் 2020 திசெம்பர் 31 ஆந் திகதி அளவில் நிரந்தர பதவியில் 19 பற்றாக்குறை ஒன்றும் 04 பதவிகளில் அங்கீகரிக்கப்பட்ட பதவிகளை மிகைத்து நியமனங்களும் ஒப்பந்த அடிப்படையில் 08 பதவிகளுக்காக அங்கீகரிக்கப்பட்ட பதவிகளை மிகைத்து நியமனம் ஒன்றும், 02 பதவிகளில் பற்றாக்குறையும் மற்றும் தற்காலிக பதவிகள் 02 இல் பற்றாக்குறை ஒன்றும் காணப்பட்டது. | கூட்டுத்தாபணத்தின் ஒட்டு மொத்த பதவியணியில், ஒவ்வொரு பதவித் தொகுதியின் கீழ் அங்கீகரிக்கப்பட்டிருந்த பதவிகளின் எண்ணிக்கை (நிரந்தர அல்லது ஒப்பந்த) மிகைக்காதவாறு பதவியணி ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப் பட்டது. அதன்படி ஒட்டுமொத்த அங்கீகரிக்கப்பட்ட பதவியணியை மிகைத்து ஆட்சேர்ப்பு ஏற்பட்டிருக்கவில்லை. அதே போல் நிறுவனத்தின் பதவிகளில் வெற்றிடங்கள் காணப்பட்ட போதிலும் நிறுவனம் முகம் கொடுத்துள்ள நிதி நெருக்கடி காரணமாக அத்தியவசியமான வரையறுக்கப்பட்ட பதவியணி ஒன்றின் மூலம் கூட்டுத்தாபணத்தின் அலுவல்களை பேணிச் செல்வதற்கு நேரிட்டிருந்தது. | குறிப்பிட்ட கடிதத்தின் படி அங்கீகரிக்கப்பட்ட பதவியணியுள் மாத்திரம் ஆட்சேர்ப்பு மேற்கொள்ள வேண்டும் |

மேலும் ஒப்பந்தப் பதவியணியை மிகைத்த நியமனங்களுக்காக மீளாய்வாண்டின் போது ரூபா 3,126,189 தொகை மற்றும் நிரந்தர பதவிகளை மிகைத்த நியமனங்களுக்காக ரூபா 2,417,804 இற்கான சம்பளங்கள் மற்றும் படிகளாக செலுத்தப்பட்டிருந்தது.

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | தாபனக் கோவையின் அத்தியாயம் II பிரிவு 5.2 பிரகாரம் ஏதேனும் பதவி ஒன்றில் வெற்றிடம் ஒன்று ஏற்பட்டவுடன் அந்தப் பதவிக்காக நிரந்தர உத்தியோகத்தர் ஒருவர் நியமனம் செய்யப்பட வேண்டியிருந்த போதிலும் 2008 ஆண்டு முதல் வெற்றிடமாக காணப்பட்ட ‘‘முகாமையாளர்- சட்டம்’’ இற்காக நிரந்த உத்தியோத்தர் ஒருவர் நியமனம் செய்யாமல் ஒப்பந்த அடிப்படையின் மீது நியமனம் செய்யப்பட்ட உத்தியோகத்தருக்காக மீளாய்வாண்டின் போது ரூபா 220,609 இற்கான செலவு ஒன்று மேற்கொண்டிருந்தது. | ‘‘முகாமையாளர்- சட்டம்’’ பதவி அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் காணப்பட்ட, சுமார் 12 வருட காலமாக ஒப்பந்த அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டிருந்த பதவியொன்றாகும். அடிக்கடி நிரந்த அடிப்படையில் இந்தப் பதவிக்கு தகைமையுடைய உத்தியோகத்தர் ஒருவர் சேர்ப்பதற்கு முயற்ச்சி செய்த போதிலும் கூட்டுத் தாபனத்தின் விடயப் பரப்பிற்கு பொருத்தமான அனுபவம் உள்ள சட்டத்தரணி ஒருவர் MM 1-1 தரத்தின் சம்பளத் திட்டத்தின் கீழ் ஆட்சேர்ப்பதற்கு முடியாதிருந்தது. முறையான செய்முறை ஒன்றினை கடைபிடித்து முகாமையாளர் - சட்டம் பதவிக்காக அமைச்சின் பரிந்துரை மற்றும் முகாமைத்துவச் சேவைத் திணைக்களத்தின் அங்கீகாரத்துடன் வரைபு ஆட்சேர்ப்பு நடவடிக்கை முறைக்கு இணங்க 2022.01.03 ஆந் திகதி முதல் செயற்படுமாறு நிரந்தர பெண் உத்தியோகத்தரும் ஒருவர் நியமனம் செய்யப்பட்டது. எவ்வாறாயினும் அந்தப் பெண் உத்தியோகத்தர் வெளிநாடு செல்வதற்காக 2022.05.31 ஆந் திகதி முதல் சேவையை விட்டு விலகியிருந்ததுடன் தற்போது சேவையின் தேவைப்பாட்டின் காரணமான மீண்டும் ஒரு முறை அந்தப் பதவிக்காக ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பு ஒன்று மேற்கொளள்ளப்பட்டது. | வெற்றிடமாக காணப்பட்ட அத்தியவசியப் பதவிகளுக்காக நிரந்த உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்கள் சேர்க்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | 2018 ஜுலை 18 திகதிய 3/2018 இலக்கம் கொண்ட முகாமைத்துவ சேவைச் சுற்றறிக்கையின் அத்தியாயம் II இன் படி முகாமைத்துவச் சேவை திணைக்களத்தின் பூர்வாங்க அங்கீகாரம் ஒன்று இன்றி 07 பதவிகளுக்காக ஒப்பந்த அடிப்படையில் மற்றும் நிரந்தர அடிப்படையில் ஆட்சேர்க்கப்பட்ட உத்தியோகத்தர்களுக்காக 2020 ஆண்டின் போது ரூபா 3,051,901 இற்கான செலவென்று கூட்டுத்தாபனம் மேற்கொண்டிருந்தது. | மேற்கூறிய நியமனங்கள் மேற்கொள்ளப்பட்டது அங்கீகரிக்கபட்ட பதவியணியில் காணப்பட்ட பதவிகளுக்காகவேயாகும். அத்துடன் அதற்காக தவறுதலாக மீண்டும் ஒருமுறை முகாமைத்துவ சேவைத் திணைக்களத்தின் அங்கீகாரம் பெற்றிருக்கவில்லை. | முகாமைத்துவ சேவைத் திணைக்களத்தின் அங்கீகாரம் இன்றி ஆட்சேர்ப்பு மற்றும் சம்பளம் செலுத்துதல் மேற்கொள்ளக் கூடாது. |
| (ஈ) | 2003 ஜூன் 02 ஆந் திகதிய 12 ஆம் இலக்கம் கொண்ட அரச தொழில் முயற்சிச் சுற்றறிக்கையில் பந்தி 9.3.1 இன் பிரகாரம் ஏதேனும் பதவியொன்றிற்காக ஆட்சேர்ப்பதற்காக காணப்பட வேண்டிய கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் உட்பட அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்வு நடவடிக்கை முறை ஒன்று கூட்டுத்தாபனத்தில் காணப்படவில்லை. | கூட்டுத்தாபனத்தில் ஆட்சேர்ப்பு நடவடிக்கை முறையை தயாரித்தல் தொடர்பாக முகாமைத்துவ சேவைத் திணைக்களம் மற்றும் அமைச்சினால் வழங்கியிருந்த அறிவுரையின் படி, அப்போது தயாரிக்கப்பட்டிருந்த ஆட்சேர்ப்பு நடவடிக்கை முறை மூன்று தடவைகள் திருத்திய பின்னர் முகாமைத்துவ சேவைத் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்ட வரைவு ஆட்சேர்ப்பு நடவடிக்கை முறை அத் திணைக்களத்தினால் மீண்டும் திருத்துவதற்காக எமது நிறுவனத்திற்கு அனுப்பப்பட்டிருந்ததுடன், அந்த அறிவுரைகளின் படி தடவையும் முறையும் குறிப்பிட்ட திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு 2022.07.07 திகதிய கடிதத்தின் மூலம் முகாமைத்துவ சேவைத் திணைக்களத்திற்கு ஒப்படைக்கப்பட்டது. | கூட்டுத்தாபனத்தினால் ஆட்சேர்ப்பு மற்றும் பதவியணி நடவடிக்கை முறையொன்று தயாரிக்கப்பட்டு முகாமைத்துவச் சேவைத் திணைக்களத்தின் அங்கீகாரம் பெறப்பட வேண்டும். |
| (உ) | தாபனக்கோவையின் அத்தியாயம் II உபபிரிவு 3 இன் பிரகாரம் அரச சேவையின் அனைத்து வெற்றிடங்களுக்காக நியமன உத்தியோகத்தரினால் பகிரங்க அறிவித்தல் மூலம் விண்ணப்பங்கள் அழைக்கப்பட வேண்டியிருந்த போதிலும் கூட்டுத்தாபனத்தினால் மீளாய்வாண்டின் போது மேற்கொள்ளப்பட்டிருந்த 04 புதிய ஆட்சேர்ப்புகளுக்காக பகிரங்க | பகிரங்க அறிவித்தல் வெளியிட்டு குறிப்பிட்ட ஆட்சேர்ப்புக்காக மேற்கொள்ளப்படுகின்றது. தற்காலிக நியமனங்களுக்காக பகிரங்க செய்தித்தாள் அறிவித்தல் வெளியிடும் போது பாரிய செலவொன்று மேற்கொள்ள நேரிடுவதுடன், கூட்டுத்தாபனம் தற்போது முகம்கொடுத்துள்ள நிதி | பகிரங்க அறிவித்தல் மூலம் விண்ணப்பங்கள் அழைத்தலுக்கு புறம்பாக ஆட்சேர்ப்பு மேற்கொள்ளக் கூடாது. |

| | |
|---|---|
| அறிவித்தல் மூலம் விண்ணப்பம் அழைத்தலுக்கு புறம்பாக மேற்கொள்ளப்பட்டிருந்தது. | நெருக்கடியின் காரணமாக அவ்வாறான செலவுகள் மேற்கொள்வதற்கு முடியாதிருந்தது. |